THRU the BIBLE

வேத ஆராய்ச்சி

தேவனின் சிருஷ்டிப்பிலிருந்து மனிதனின் பாவ வீழ்ச்சி வரை

தொகுதி 1 ஆதியாகமம் 1–3



நல்வரவு
நண்பர்களே!

நீங்கள் விரும்புகிற நேரத்தில் படிப்பதற்கு ஏதுவான
தேவனுடைய ஆவிக்குரிய வளங்கள் இவை



ஒரு வாரத்தில்,
உங்களுடைய வசதிற்கேற்ப நேரம்
ஒதுக்கிப் படிப்பதற்கான பாடங்கள்

திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி ஞாயிறு

உங்களுடைய வசதிற்கேற்ப



நீங்கள் ஒரே நேரத்தில், இந்தப் பாடத்தின் அனைத்து காரியங்களையும் படிக்கலாம்.
(30-45 நிமிடங்கள் ஒதுக்கி - வாசியுங்கள், சிந்தியுங்கள், நடைமுறைப்படுத்துங்கள்)

அல்லது



ஒவ்வொரு நாளும் எவ்வளவு வாசிக்க வேண்டும் என்பதை தெரிந்தெடுங்கள்

அல்லது



நாங்கள் பரிந்துரைக்கிற இடைவேளையைப் பயன்படுத்திக்கொண்டு மீண்டும் உங்களுடைய வசதிக்கேற்ற நேரத்தில் படியுங்கள்



நீங்கள் கர்த்தருடன் செலவிடுகிற நேரங்கள் அவருடனான உங்கள் உறவை வளமாக்குவதாக.

இந்தக் கற்றலின் முக்கிய அம்சங்கள்

முன்னுரையாகச் சில காரியங்கள் பக்கங்கள்

வாழ்க்கையை வாழ்வதற்கு தேவ ஞானத்தை ஏன் பெற்றுக்கொள்ள வேண்டும்? 04

“வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்” இந்தப் பாடத்தை பயன்படுத்துவது எவ்வாறு? 05

நண்பர்களைச் சந்தியுங்கள், படித்ததைப் பகிர்ந்துகொள்ளுங்கள், நீங்களும் வளருங்கள் 06

நீங்கள் எதிர்கொள்கிற சூழ்நிலைகளில் தேவஞானத்தைப் பயன்படுத்துவது எவ்வாறு? 07

பாடங்கள்

ஆதியாகமம்: ஒரு பொதுவான கண்ணோட்டம் 08

ஆதியாகமம் 1:1 22

ஆதியாகமம் 1:2-31 35

ஆதியாகமம் 2:1-25 57

ஆதியாகமம் 3:1-13 74

ஆதியாகமம் 3:14-24 94

ஏன் வாழ்க்கையை வாழ்வதற்கு **தேவ ஞானத்தை** பெற்றுக்கொள்ள வேண்டும்?

ஏனெனில்

தேவன் தம்முடைய குமாரன் கர்த்தராகிய

இயேசு கிறிஸ்துவின்

குழுவில் இருக்கும்படி நம்மையும் தெரிந்துகொண்டிருக்கிறார்.

அவருடைய ராஜ்யம்
ஒளியின் ராஜ்யம்

அவருடைய ராஜ்யத்துக்கான அழைப்பு, உன்னத அழைப்பு:
இது ஒரு பரிசுத்த அழைப்பு, பரலோக அழைப்பு

நாம் பரலோகத்தின்
குடிமக்களாயிருக்கிறோம்

↓

கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக பூமிக்கு அனுப்பப்பட்டிருக்கிறோம்

↓

பூமியில் பரலோக விதிகளின்படி (தேவன் எதிர்பார்க்கும் தரத்திற்கு ஏற்ப)
எவ்வாறு வாழவேண்டும் என்பதைச் சொல்லும்
தேவனுடைய வார்த்தையால் தகுதியாக்கப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டுள்ளோம்.

பூமியில் தேவசித்தத்தை நிறைவேற்றுதல்

- கிறிஸ்துவின் சீடர்களை உருவாக்குதல்
- சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்துதல்

தேவனுடைய பிரதிநிதியாக பூமியில் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருத்தல்

↓

இருளின் ராஜ்யத்தையும், சுயத்தை மையமாகக் கொண்ட உலகத்தையும், பிசாசையும் ஜெயித்தல்

“வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்”

என்னும் இந்தப் பாடத்தை எவ்வாறு பயன்படுத்துவது?



ஜெபத்துடன் தொடங்குங்கள்

நீங்கள் ஒவ்வொரு பாடத்தையும் படிக்கத் தொடங்குவதற்கு முன்னும், “கர்த்தாவே, இதைப் படிப்பதன் வாயிலாக, கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அறிவிலும் வளர உதவுங்கள்” என்று ஜெபியுங்கள்.



கொடுக்கப்பட்ட வேதபகுதியை முதலாவது வாசியுங்கள்

தேவனுடைய வார்த்தையின் உள்ளான அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கான கண்களைத் திறக்கும்படி அவரை அழையுங்கள்



டாக்டர் வெர்னோன் மெக்கியின் அனைத்துப் போதனைகளையும் படிக்க விரும்பினால் ttb.org என்று இணையதளத்துக்குச் சென்றோ அல்லது பைபேசி செயலியை பதிவிறக்கம் செய்தோ அல்லது யூடியூப்-ல் சென்றோ கேட்டும் வாசித்தும் கற்றுக்கொள்ளலாம்.



ஒவ்வொரு பாடத்தைப் படித்த பிறகும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதிலளியுங்கள். இது நீங்கள் வேதத்தை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கு உதவும். இக்கேள்விகளை குழுவாக விவாதித்துப் படிப்பீர்களாயின் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.



ஆண்டவர் என்ன கற்றுக்கொடுக்க விரும்புகிறாரோ அதை இருதயத்தில் பதியும்படி ஆவியானவரின் ஒத்தாசையைக் கேளுங்கள்

“கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக”

~ (கொலோசெயர் 3:16)

தனிப்பட்ட ஆயத்தம்

இந்த வாரத்திற்கென கொடுக்கப்பட்ட வேதபாடத்தை அந்த வாரத்திலேயே நீங்கள் விரும்புகிற நேரத்தில் தவறாமல் படிப்பதே தனிப்பட்ட ஆயத்தமாகும்.

நீங்கள் குழுவாக இணைந்து படிப்பீர்களாயின், நிங்கள் கற்றுக்கொண்டதை குழுவினரோடு பகிர்ந்துகொள்ளுங்கள். இது அனைவரும் இணைந்து ஆவிக்குரிய வளர்ச்சியை நோக்கிப் பயணிப்பதற்கு உதவும்.

சந்தியுங்கள்

பகிர்ந்துகொள்ளுங்கள்


வளருங்கள்

நண்பர்களைச் சந்தியுங்கள், படித்ததை இணைந்து விவாதியுங்கள், ஒருவரையொருவர் உற்சாகமூட்டுங்கள்



வாரம் ஒருமுறை

கூடிவரும்போது செய்ய வேண்டியவை



நீங்கள் எதிர்கொள்கிற சூழ்நிலைகளில்

தேவஞானத்தைப் பயன்படுத்துவது எவ்வாறு?

வாசியுங்கள் வேதவாக்கியங்களுடன் உறவாடுதல்

சிந்தியுங்கள் வாசித்தவற்றை சிந்தியுங்கள்

செயல்படுங்கள் சிந்தித்த பிறகு கேள்விகளுக்கு விடையளியுங்கள்

நினைவில் கொள்ளுங்கள் சரியானதை நடைமுறைப்படுத்த நினைவில் வைத்திருங்கள்



டாக்டர் வெர்னோன் மெக்கியின் சிறந்த வார்த்தைகள்:

> “நாம் ஆவியானவரின் செயல்பாடுகள் நிறைந்த காலத்திலும், கிருபையின் காலத்திலும் வாழ்ந்கிறபடியால் அந்த ஆவியானவர் கிறிஸ்துவைக் குறித்த காரியங்களை நமக்கு வெளிப்படுத்திக் கற்றுக்கொடுக்கிறார்.”

THRU the BIBLE

ஆதியாகமம்

ஒரு பொதுவான கண்ணோட்டம்



2 வேதத்தைக் கற்பதற்கு டாக்டர் வெர்னோன் மெக்கி கூறும் வழிகள்

வேதாகமத்தைப் படிக்கத் தொடங்குவதற்கு முன்னதாக இந்த இரு வழிகளையும் உங்கள் மனதில் பதித்துக்கொள்ள வேண்டியது அவசியம்.



முதல் படி

தொலைநோக்குப் பார்வை

வேதாகமத்தைத் திறம்படக் கற்றுக்கொள்வதற்கு, "தொலைநோக்கப் பார்வையே" தான் முதல் படியாகும். வேதாகமத்தைப் பற்றிய விரிவான ஆய்விற்குள் செல்வதற்கு முன்னதாக, அதிலுள்ள ஒவ்வொரு புத்தகத்தின் "முக்கியமான அம்சங்களைப்" புரிந்துகொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். அதாவது அதில் சொல்லப்பட்டிருக்கும் முக்கிய கருப்பொருள்களையும் அது சொல்லப்பட்டிருக்கும் கட்டமைப்பையும் கவனிக்க வேண்டும்



இரண்டாம் படி

நுணுக்கமான பார்வை

நுணுக்கமான பார்வை என்பது வேதத்திலுள்ள ஒவ்வொரு அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிற முக்கிய கருப்பொருள், முக்கிய வசனங்கள், குறிப்பிடத்தக்க வார்த்தைகள், கிறிஸ்துவைப்பற்றிய போதனைகள், பின்பற்ற வேண்டிய கட்டளைகள், உரிமைபாராட்ட வேண்டிய வாக்குத்தத்தங்கள், சிந்தித்துச் செயல்படுத்த வேண்டிய புதிய சத்தியங்கள் போன்றவற்றை நன்றாக அறிந்துகொள்ளும்படி படிப்பதாகும்.

தேவன் இருக்கிறார்


நித்தியம்
(தொடக்கமும்
முடிவுமில்லாத காலம்)

தொடக்கமும் முடிவும் இல்லாத காலத்தில்
தேவன் எவ்வாறு இருக்கிறார்?

கடந்த காலம்

நிகழ்காலம்

வருங்காலம்



காலம் என்பதை இந்தப் பூமியின் கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ளுதல்

தொலைநோக்கப் பார்வை / பருந்துப் பார்வை


ஆதியாகம புத்தகத்தை நாம் வேதாகமத்தின் "விதை நிலம்" என அழைக்கலாம். இந்தப் புத்தகத்திலேயேதான் எல்லாவற்றின் தொடக்கத்தையும், தொடக்கத்திற்கான மூல ஆதாரத்தையும் உயிரினத் தோற்றத்தையும் காண்கிறோம்.

ஆதியாகமம் ஓர் அழகிய ரோஜா மொட்டைப் போன்றது, இதுவே வேதாகமத்தின் மற்ற புத்தகங்களை படிப்படியாகத் திறந்து காண்பிக்கிறது".

- டாக்டர் ஜே. வெர்னோன் மெக்கி

அ இந்தப் பூமியில் உள்ள அனைத்தும் முதன்முறையாக எப்படி உருவாக்கப்பட்டது என்பதை விளக்குகிற புத்தகமாக ஆதியாகமம் திகழ்கிறது (ஆதியாகம் 1:11).

படைப்பு, ஆண், பெண், திருமணம், குடும்பம், பாவம், மீட்பு, பணி, நாகரீகம், கலாச்சாரம், கொலை, பலி, மக்களினங்கள், மொழிகள் மற்றும் நகரங்கள் ஆகியவற்றின் தொடக்கத்தை ஆதியாகமம் விவரிக்கிறது.




ஆ ஆதியாகமத்தை வாசிக்கும்போது அடிக்கடியாக வருகிற குறிப்பிடத்தக்க சொற்றொடர்களைக் கவனியுங்கள்.

எடுத்துக்காட்டாக, **"வம்ச வரலாறு"** என்ற இந்த சொற்றொடர் அடிக்கடியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். ஆதியாகம புத்தகம், ஆரம்பகால குடும்ப வரலாற்றை நமக்குத் தருகிறது. ஆதியாகமத்தில் தொடங்குகிற மனித குலத்திலேயே நாமும் உறுப்பினர்களாக இருப்பதால் இதைக் குறித்துப் படிப்பது நமக்கும் முக்கியமானதாக இருக்கிறது.

"வம்ச வரலாறு"


இந்தச் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன: ஆதியாகமம் 2:4-4:26,5:1-6:8, 6:9-:29, 10:1-11:9, 11:10-26


உடன்படிக்கையின் வம்ச வரலாறு




இ ஆதியாகம புத்தகத்தில், தேவனுடன் தொடர்பு கொண்டிருந்த சில தேவபக்தியுள்ள மனிதர்களைப் பற்றிய விவரங்கள் எவ்வித மிகைப்படுத்துதலும் இன்றி விவரிக்கப்பட்டுள்ளதை அறிந்துகொள்ளலாம்.

ஆதியாகமத்தை, **"**வாழ்க்கை வரலாறுகளின் புத்தகம்**"** என்று சிலர் அழைக்கிறார்கள். குறிப்பாக ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, பார்வோன், யோசேப்பு உட்பட யாக்கோபின் மற்ற பதினோரு குமாரர்கள் பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பை ஆகியோரை தொடர்ந்து ஆசீர்வதித்து வந்தார் என்பதைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, இவர்களுடன் தொடர்பில் இருந்த லோத்து, அபிமெலேக்கு, போத்திபார், பானபாத்திரக்காரன், பார்வோன் ஆகியோரையும் தேவன் ஆசீர்வதித்தார் என்பதும் சொல்லப்பட்டுள்ளது.







முற்பிதாக்களுக்குத் தேவன் அளித்த தரிசனங்கள்



ஆதியாகமம் 17 - தேவன் ஆபிராமுக்கு (ஆபிரகாமின் பழைய பெயர்) தரிசனமானார் (முதன் முறையாக சரீரத்தில் தரிசனமானார்).

ஆதியாகமம் 26 - தேவன் ஈசாக்குக்குத் தரிசனமாகி, அவனை எகிப்துக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரித்தார்.







ஆதியாகமம் 32 - தேவன் யாக்கோபுக்குத் தரிசனமாகி, அந்த இரவு முழுவதும் அவனுடன் போராடினார்.


ஆதியாகமம் 46 - தேவன் இஸ்ரவேலுக்கு மீண்டும் ஒருமுறை (யாக்கோபுக்குத்) தரிசனமானார். அதாவது யாக்கோபு எகிப்துக்குச் செல்வது தேவனின் திட்டம் என்றும், தேவன் அவனோடே இருப்பார் என்பதையும் உறுதியளிக்கும் விதமாகப் பேசினார்.



உ தேவனுடைய உடன்படிக்கை

ஆதியாகமப் புத்தகத்தில் பல உடன்படிக்கைகளைப் பற்றி குறிப்பிட்டிருப்பதை காணமுடியும்.

தேவனால் மட்டுமே நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகள் இவை.



ஆதியாகமம் 8

தேவன் நோவாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கை அதாவது முழு உலகத்தையும் அழிக்க இனிமேல் பெருவெள்ளத்தைக் கொண்டு அழிப்பதில் என்னும் உடன்படிக்கை



ஆதியாகமம் 15

தேவன் ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கை

ஊ இந்தப் புத்தகத்தில் பலிபீடத்தைப் பற்றி முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது

கட்டப்பட்ட பலிபீடங்கள்

ஆதியாகமம் 8 - அராராத் மலையில் நோவா கட்டிய பலிபீடம்

ஆதியாகமம் 12 - சீகேம் என்னுமிடத்தில் ஆபிரகாம் கட்டிய பலிபீடம்


ஆதியாகமம் 26 - பெயர்செபாவில் ஈசாக்கு கட்டிய பலிபீடம்

ஆதியாகமம் 33 - ஏல்எல்லோகே இஸ்ரேல் என்னுமிடத்தில் யாக்கோபு கட்டிய பலிபீடம்




எ மனிதனுடைய எல்லாப் பிரச்சினைகளுக்குமான மூலகாரணம்

மனிதன் செய்த பாவங்களுக்கான நியாயத்தீர்ப்புகளும், அப்பாவங்களிலிருந்து மனிதன் விடுபடுவதற்காக தேவன் தருகின்ற மீட்பும் ஆதியாகமப் புத்தகத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.



ஏ பாவஇயல்பும் பாவத்தின் பிறப்பிடமும்



நுணுக்கமான பார்வை /(ஆழமாக ஆராய்தல்)


ஆதியாகமப் புத்தகத்தில் இரண்டு பெரும் பிரிவுகள் இருப்பதைக் காணலாம்

முதல் பிரிவு (ஆதியாகமம் 1-11)

படைப்பின் தொடக்கம் பற்றிய காரியங்கள் முதல் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளன.

முதல் பிரிவு படைப்பு முதல் ஆபிரகாமின் அழைப்பு வரை நீண்டுள்ளது.

முதல் பிரிவில், நம் காலத்தில் வாழுகிற சிந்தனையாளர்களின் மனதையும் ஈர்க்கக்கூடிய பல முக்கியமான காரியங்கள் விவாதிக்கப்பட்டுள்ளன.
எடுத்துக்காட்டு: தேவனின் படைப்பு, மனிதனின் வீழ்ச்சி, உலகை அழித்த பெருவெள்ளம் (ஜலப்பிரளயம்), மனிதர்கள் உருவாக்கிய பாபேல் கோபுரம்



ஆதியாகமத்தின் முதல் பதினொரு அதிகாரங்கள் இரண்டாயிரம் ஆண்டு கால மனித வரலாற்றை உள்ளடக்கியுள்ளது.

இரண்டாம் பிரிவு (ஆதியாகமம் 12-50)


12-50 அதிகாரங்களில், தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையை பல்வேறு தனிப்பட்ட மனிதர்களின் வாயிலாக நிறைவேற்றியதைக் காண்கிறோம்.

இந்த இரண்டாம் பிரிவில், ஆபிரகாமிலிருந்து யோசேப்பு வரையுள்ள காலகட்டம் சொல்லப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் வாழ்ந்த முக்கிய நபர்கள்: விசுவாசிகளின் தந்தையாகிய ஆபிகாரம், ஆபிரகாமின் நேச குமாரன் ஈசாக்கு, யாக்கோபு - தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு அவரால் சிட்சித்து வளர்க்கப்பட்ட யாக்கோபு, பலவிதமான பாடுகளைச் சகித்து, பின்பு உயர்த்தப்பட்ட யோசேப்பு. இத்தகையோரைப் பற்றி இந்த இரண்டாம் பிரிவு முக்கியக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

இரண்டாம் பிரிவு முப்பத்தொன்பது அதிகாரங்களைக் கொண்டதாக இருந்தாலும், 350 ஆண்டு கால நிகழ்வுகளை மட்டுமே விவரிக்கிறது. ஆபிரகாம் முதல் இயேசு கிறிஸ்து வரையில் மொத்தம் 2000 ஆண்டுகள் ஆகும்.

பூமியின் காலப்பகுப்பு வரிசைகள்

(ஆதியாகமம் முதல் மத்தேயு வரை)



ஆதியாகமம்

புத்தகத்தின்

ஊடாக

உங்கள் பயணத்தை

நாங்கள் எதிர்நோக்குகிறோம்

உங்கள் பெயர் .....

THRU the BIBLE



உங்கள் படிப்பிற்கான திட்டமிடல்

வேத பகுதி: ஆதியாகமம் 1:1
வாசிக்கும் நேரம்: 10-15 நிமிடங்கள்

ஜெபம்

நாம் படிக்கத் தொடங்குவதற்குமுன், நமது இருதயங்களையும், எண்ணங்களையும், காதுகளையும், கண்களையும் தேவனுடைய தெய்வீக வடிவமைப்பை நன்கு புரிந்துகொள்வதற்கு ஏதுவாக அவர்தாமே வழிநடத்தும்படி ஒரு நிமிடம் வேண்டுதல் செய்வோம்.

வேத பகுதி

"ஆதியிலே தேவன் வானத்தையும்
பூமியையும் சிருஷ்டித்தார்"
ஆதியாகமம் 1:1



ஒவ்வொரு மனிதரும் தங்களது வாழ்க்கையின் ஏதாவது ஒரு காலகட்டத்தில், இக்கேள்விகளைக் குறித்துச் சிந்திக்கக் கடன்பட்டிருக்கிறான். இக்கேள்விகளுக்கான பதில்களாக பல கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. ஆயினும் ஒரேயொரு பதில்தான் சரியானதாக இருக்க முடியும்.

நமது வாழ்க்கையைக் குறித்தோ, ஒரு உறவைக் குறித்தோ, ஒரு தேசத்தைக் குறித்தோ, ஒரு உலகத்தைக் குறித்தோ அல்லது வேறு எதைக் குறித்தோ நாம் புரிந்துகொள்ள வேண்டுமெனில், அவற்றின் தொடக்கத்தை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமானது. ஏனெனில், ஒரு காரியத்தின் தொடக்கமே அதன் மூலகாரணத்தையும், அது இப்பொழுது இருக்கிறதற்கான நோக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

அறிவியல் அறிஞர்களும் இறையியல் வல்லுநர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவோ அல்லது ஒன்றின் வலிமையையும் அழகையும் சிக்கலான தன்மையையும் விளக்குவதற்காகவோ அவற்றின் தோற்றத்தையே ஆராய்கின்றார்கள்.

தேவனின் படைப்புச் செயலும் அதற்கு எதிரான மனிதனின் கோட்பாடுகளும்

பரிசுத்த வேதாகமத்தை எடுத்து அதன் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தை திறந்து வாசிப்பீர்களாயின், இந்த உலகத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் **வேதம் கூறும் உண்மைகளைக்** கண்டுகொள்வீர்கள்.

முதல் புத்தகமாகிய ஆதியாகமே **இந்தப் பிரபஞ்சத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய மாற்றங்களைப் பற்றியும்,** ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின் **குணநலன்களைப் பற்றியும்** நமக்கு வெளிப்படுத்துகிறதைக் காண்பீர்கள்.

ஆதியாகமப் புத்தகத்தின் பக்கங்களை **கருத்தாய் வாசிக்கிற ஒவ்வொருவரிடத்திலும்,** வார்த்தையினால் பிரபஞ்சத்தைப் படைத்து **உயிர் கொடுத்தவரின் வார்த்தைகள்,** தாங்கள் இதுவரை கொண்டிருந்த படைப்பு பற்றிய கருத்துகளிலிருந்து மாறுபட்ட ஒரு புதிய கண்ணோட்டத்தை ஏற்படுத்துவதைக் காணலாம்.

இந்தப் பிரபஞ்சத்தின் **கண்களுக்குப் புலப்படாத கட்டமைப்பையும்,** கண்களுக்குத் தெரிகிற அளவையும் குறித்து விஞ்ஞானிகள் ஆராயும்போது, ஆதியாகமப் புத்தகத்தின் முதலாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள காரியங்களின் ஆழமான தன்மையானது மனிதகுலம் கற்றுக்கொள்வதற்குத் தேவையான **நிறைவான தகவல்களை** தொடர்ந்து அளித்து வருகிறது.

வேதாகமம் அறிவியல் சார்ந்த உண்மைகளுடன் முரண்படவில்லை என்றாலும், தேவன் தம்மைப் பற்றியும் தம்முடைய படைப்புகளைப் பற்றியும் வேதத்தில் வெளிப்படுத்தியவைகளை அனைத்து மக்களும் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்.

"விசுவாசத்தினாலேயே நாம் அண்டசராசரங்கள் அனைத்தும் தேவன் தமது வார்த்தையினால் கட்டளையிட உருவாக்கப்பட்டன என்று விளங்கிக்கொள்கிறோம். ஆகவே கண்ணுக்குப் புலப்படுகிறவைகள் கண்ணுக்குப் புலப்படுகிறவைகளிலிருந்து உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்" என்று எபிரெயர் நிருபம் 11:3 (இலகு தமிழ் வேதாகமம்) நமக்கு விளக்குகிறது.



சில கோட்பாடுகள் இந்த உலகம் நூறு கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியது எனக் கூறுகின்றன. வேறு சிலர் இருநூறு கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்றும், இன்னும் சிலர் பல நூறு கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியது எனவும் கூறுகின்றார்கள். **ஆனால் யாரும் இதைக் குறித்து உறுதியாகச் சொல்ல முடியாதபடிக்கு தேவன் இந்தக் காரியங்களை தம்முடைய நித்தியத்தில் மறைவாக வைத்திருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.**



நாம் காலங்களின் வரிசைக் கிரமத்தை ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்க்கும்போது (நிகழ்காலம் கடந்தகாலமாக மாறுவதையும், எதிர்காலம் நிகழ்காலமாக மாறுவதையும்)[1], **நித்திய தேவனோ கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய மூன்றையும் ஒரே தெய்வீக நிகழ்வாகவே பார்க்கிறார்.** எல்லா காலங்களும் அவருக்கு முன்பாக ஒரே நேரத்தின் நிகழ்வாக இருப்பதுபோல, அவர் கடந்த காலத்தையும், எதிர் காலத்தையும் ஒரே சமமான காலமாகவே காண்கிறார். ஆகவேதான் அப்போஸ்தலனாகிய பேதுரு, "கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்" (2 பேதுரு 3:8) என்று எழுதுகிறார்.


[1] The Works of Jonathan Edwards (Edinburgh, Scotland: Banner of Truth Trust, 1974), 172

இரண்டு உண்மை நிலைகளான பொருளும் ஆற்றலும் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளன என்னும் அறிவியல் விஞ்ஞானி ஆல்பிரட் ஐன்ஸ்டீனின் கண்பிடிப்பு இயற்பியல் உலகில் சிறந்த நுண்ணறிவாக அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கண்ணுக்குத் தெரியாத ஆற்றலிலிருந்து கண்ணுக்குத் தெரிகிற ஒரு பொருளை உருவாக்க முடியும் என்று அவரது விதி கூறுகிறது. இதையேதான் வேதாகமமும், "கண்ணுக்குப் புலப்படுகிறவைகள் (கண்ணுக்குத் தெரிகிற பொருள்கள்) கண்ணுக்குப் புலப்படுகிறவைகளிலிருந்து (பொருள்களிலிருந்து) உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்" என்று கூறுகிறது (எபிரேயர் 11:3).

உலகத் தோற்றம் பற்றிய பல்வேறு கோட்பாடுகள் உள்ளன. இருப்பினும் இவை அனைத்தையும் **இரு வகைகளுக்குள்** அடக்கிவிடலாம்.

வேதம் கூறுகிற, இறைபடைப்புக் கோட்பாட்டை நிராகரிக்கும் சில குறிப்பிடத்தக்க மனித கோட்பாடுகள் சிலவற்றைக் கீழே தருகிறோம்.


சிருஷ்டிப்பின் இருவகை கோட்பாடுகள்



டார்வினின் பரிணாமக் கோட்பாடு

இந்த கோட்பாடு உலகத்தாரால் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கிறது. இயற்கையில் ஏதேச்சையாய் தோன்றிய சீரற்ற மாற்றங்களின்போது, **மிக எளிமையான ஒன்றிலிருந்து சிக்கலான உயிரின வழிவங்கள் பரிணாம மாற்றம் அடைந்து உருவாகின** என்று இந்தக் கோட்பாடு விளக்கம் தருகிறது. பின்னர் இயற்கையாக ஏற்பட்ட இந்த மாற்றங்களின்போது, இயற்கைத் தேர்வின் மூலமாக திறமையான உயிரினங்கள் பிழைத்துக்கொண்டன என்றும் இந்த கோட்பாடு வரையறுக்கப்படுகிறது.

இந்தக் கோட்பாட்டில் சொல்லப்படுகிற தொடர்ச்சியான சீரற்ற மாற்றங்கள் ஏதோ ஒரு வகையில் ஏதேச்சையாக உருவாகின என்று கூறுவதால் இந்தக் கோட்பாடு படைப்பில் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை நிராகரிக்கிறது.



இறையியல் பரிணாமக் கோட்பாடு

இந்தக் கோட்பாட்டை ஆதரிப்பவர்கள் **இறைவன் முதலாவது ஒரு பொருளையும் ஒரு உயிரையும் படைத்தார்** என்று நம்புகிறார்கள். பின்னர் அந்தப் பொருளும் உயிரும் படிப்படியாக பரிணாம வளர்ச்சி அடைந்து (பரிணாமக் கோட்பாட்டில் சொல்லப்பட்டுள்ளபடி) உலகத்தில் பெருகின என்று கூறுகிறார்கள். இந்தக் கோட்பாடானது இயற்கை தேர்வின் கொள்கையிலிருந்து மாறுபட்டதாக இருக்கிறது.

தெய்வீகப் பரிணாம கோட்பாடு

இந்தக் கோட்பாடு கடவுள் இந்தப் **பிரபஞ்சத்தை படைத்துவிட்டு, பின் அதிலிருந்து கடந்துசென்றுவிட்டார்** என்றும், அவர் உயிரினத் தோற்றம் பற்றிய பரிணாம வளர்ச்சியில் நேரடியாக எவ்விதப் பங்கையும் வகிக்கவில்லை என்றும் கூறுகிறது.

நுண்ணறிவு வடிவமைப்புக் கோட்பாடு

இந்தக் கோட்பாடானது **பிரபஞ்சத்திலுள்ள சில வடிவங்கள், வடிவமைப்புகள் மற்றும் செயல்முறைகள் இயற்கையான காரணங்களாலோ அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளினாலோ உருவாகி இருக்க முடியாது** என்று கூறுகிறது. இந்த அணுகுமுறையைக் கொண்டிருக்கிற விஞ்ஞானிகள், இந்த வடிவங்களை ஆராய்ந்து, ஓர் இயற்கை உலகத்தை உருவாக்கி, அதை ஒரு வடிவமைப்பாளரின் கண்ணோட்டத்தில் சுட்டிக்காட்டுகிறார்கள். கடவுளே இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார் என்று நம்புகிற மக்கள்கூட சில சமயங்களில், இந்தக் கோட்பாட்டுடன் தங்களை இணைத்துக்கொண்டு, தங்களுடைய நிலைப்பாட்டிற்கு இதிலிருந்து ஆதாரங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் நுண்ணறிவு வடிவமைப்புக் கோட்பாடு வேதாகமம் கூறும் படைப்புக் கோட்பாட்டுக்குச் சமமானது அல்ல.

பெருவெடிப்புக் கோட்பாடு

பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த ஒரு பெரிய வெடிப்பிலிருந்து உருவானதே இந்த பிரபஞ்சம் என்பதே இக்கோட்பாடாகும். இது ஓர் அறிவியல் செயல்முறையை விவரிக்கும் அதே வேளையில், இது தெய்வீகத் தலையீட்டை மறுக்காவிட்டாலும்கூட, பெருவெடிப்பின் மூலமாகத்தான் கடவுள் இப்பிரபஞ்சப் படைப்பைத் தொடங்கினார் என்பதை நம்மால் சரியான விளக்கமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

நிலையான விரிவாக்கக் கோட்பாடு

இந்தக் கோட்பாடு, **பிரபஞ்சம் எப்போதும் இருந்து வருகிறது என்றும், இப்பிரபஞ்சம் நிலையான படைப்பாற்றல் நிலையிலேயே எப்பொழுதும் உள்ளது என்றும் வரையறுக்கிறது.** இது இப்பிரபஞ்சத்திற்கு வரையறுக்கப்பட்ட ஒரு தொடக்கம் இருக்கிறது என்பதை வலியுறுத்துகிற வேதாகமக் கோட்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது.



படைப்புக் கொள்கைகள் பற்றிய
டாக்டர் வெர்னோன் மெக்கியின் வார்த்தைகள்:

> “பரிணாம வளர்ச்சிக் கொள்கையால் பதிலளிக்க முடியாத மூன்று அம்சங்கள் உள்ளன. பூஜ்ஜியத்திலிருந்து ஏதோ ஒன்றுக்கும் இடையில் என்ன இருந்தது என்றும், ஏதோ ஒன்றுக்கும் மனித வாழ்க்கைக்கும் நடுவில் என்ன இருந்தது என்றும், மனித வாழ்க்கையிலிருந்து அது சுதந்தரமும் சுயஉணர்வும் கொண்ட மனித வாழ்க்கையாக அது எப்பொழுது மாறியது என்பதற்கும் இந்தப் பரிணாமக் கொள்கைகளால் பதிலளிக்க முடியாது.”

இந்த வேதபகுதியிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன??

அ ஒரு படைப்பாளர் இருக்கிறார்

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று வேதம் நமக்கு கற்று தருகிறது. இந்த வசனம், தேவன் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார் என்பதை எளிய முறையில் விளக்குகிறது. **யோவான் 1:1–3** வரையுள்ள வசனங்களில், படைப்பாளரைக் குறித்து மற்றொரு அம்சத்தைக் காண்கிறோம். "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது; அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்; சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை." **இவ்வசனங்கள் படைப்பில் இயேசு கிறிஸ்துவின் பங்களிப்பை நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. அவருடைய தெய்வீக நுண்ணறிவாற்றல், வேறு எதுவும் உருவாவதற்கு முன்னரே இருந்தது என்பதை இவை உறுதிப்படுத்துகின்றன.** இந்தத் தெய்வீக நுண்ணறிவாற்றலே வாழ்க்கையின் தோற்றத்திற்கும், மனிதர்கள் உட்பட அனைத்து உயிரினங்களின் வாழ்வாதாரத்திற்கும் பொறுப்பாக அமைகிறது.


ஆ படைப்பாளருக்கும் படைப்புக்கும் இடையேயுள்ள வேற்றுமைகள்

எபிரேய மொழி, தேவனின் படைப்பை விவரிக்க, **"பாரா"** என்னும் ஒரு சிறப்பான வார்த்தையைப் பயன்படுத்துகிறது. இவ்வார்த்தை, **"படைப்பு"** என்று தமிழ் வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தையானது, ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உருவாக்கும் **தேவனுடைய தனித்துவமான வல்லமையைக்** குறிக்கிறது.

ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரத்தில், படைப்பைக் குறித்து விவரிப்பதற்கு, **ஐந்து வேறுபட்ட வார்த்தைகள்** பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் படைப்பின் கருப்பொருள் எவ்வளவு விரிவானது என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. சிருஷ்டித்தார் (1:1), உருவாக்கினார் (2:22), உண்டுபண்ணினார் (1:7), உண்டாக்கினார் (2:8) ஜநிப்பித்தார் (1:21) என்ற தமிழ் வார்த்தைகளை நாம் காண முடிகிறது. இதில் நான்கு வார்த்தைகள் மனிதனைப் படைத்தபோது பயன்படுத்தப்பட்டவையாகும். இது ஏற்கனவே உள்ள பொருட்களிலிருந்து உருவாக்கப்பட்டன என்பதைக் குறிக்கிறது.

இருப்பினும், **"பாரா"** என்னும் எபிரெய வார்த்தைக்குச் சமமான "சிருஷ்டிப்பு" என்னும் சிறப்புச் சொல்லானது (அதாவது ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உருவாக்குகிற தேவனுடைய வல்லமையைக் குறிக்கும் சொல்லானது) ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் மட்டுமே **மூன்று தடவைகள்** பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இது படைப்பின் *மூன்று பரிமாணங்களின் தோற்றத்தைக் குறிப்பிடுவதாக* உள்ளது.



பருப்பொருளின் தோற்றம்
ஆதியாகமம் 1:1

உயிரினங்களின் தோற்றம்
ஆதியாகமம் 1:21

மனிதகுலத்தின் தோற்றம்
ஆதியாகமம் 1:27

இ "வானத்தையும் பூமியையும் யார் உண்டாக்கினார்?" என்பதற்கான ஒரே பதில்

தேவனுடைய பிரமாண்டமான கூற்றாகிய, **"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்"** என்னும் **தேவனுடைய வார்த்தையை நம்பி, அதை அங்கீகரிப்பதிலிருந்து** இதற்கான பதிலைப் பெற்றுக்கொள்ளலாம்.

நாம் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டுமெனில் அதை நம்புவது மிகவும் அவசியம். "விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் (கண்ணுக்குத் தெரிகிறவகைள்) தோன்றப்படுகிறவைகளால் (கண்ணுக்குத் தெரிகிறவகைளிலிருந்து) உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்" என்று எபிரெயர் 11:3 நமக்கு விளக்குகிறது.

ஈ தேவன் ஏன் இந்த பிரபஞ்சத்தை படைத்தார்??

தேவன் ஏன் இந்த பிரபஞ்சத்தை படைத்தார் என்பதைப் புரிந்துகொள்ள **அவர் யார்** என்பதை அறிந்துகொள்வது அவசியம். தேவனே எல்லாவற்றுக்குமான தொடக்கமும் முடிவுமாயும் இருக்கிறார்.

தேவன் **இந்தப் பிரபஞ்சத்தைத் தம்முடைய மகிழ்ச்சிக்காகப் படைத்தார்** என்று வேதம் கூறுகிறது (வெளி 4:11).

"நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டு வா என்பேன்" என்று ஏசாயா 43:7 -இல் கூறியிருக்கிறதைப்போல, **தம்முடைய மகத்துவத்தையும், வல்லமையையும் விளக்கிக்காட்டி மெய்ப்பிப்பதற்காக** தேவன் நம்மை படைத்தார்.

தேவன் தம்மைத் தெரிந்தெடுக்கிற **மக்களிடத்தில் ஐக்கியத்தை** வைத்துக்கொள்ள விரும்புகிறார். தேவன் நம்மை ரோபோக்களைப் போன்று உருவாக்கி, அவரைப் பணிந்துகொள்ள வைப்பதற்குத் அவரால் முடியும். ஆனால் அவ்வாறு இல்லாதபடிக்கு, நாம் அவரை மனதாரத் தெரிந்துகொண்டு, அவரை நேசித்து, அவருக்குக்காகத் தன்னார்வமாக ஊழியம் செய்து, அவருடைய நற்குணத்தை நாம் பிரதிபலிக்கவேண்டும் என்றே விரும்புகிறார். இதற்காகவே அவர் இந்தப் பிரபஞ்சத்தையும் அதிலுள்ள மனிதர்களாகிய நம்மையும் சிருஷ்டித்தார்.

பிரதிபலித்தலும், நடைமுறைப்படுத்துதலும்

1. தொலைநோக்கு பிரதிபலிப்பு:

நாம், உண்மையான நம்பிக்கைளைச் சந்தேகிக்கிற அல்லது போலிச் செய்திகளை வேண்டுமென்றே பரப்பப்படுகிற காலகட்டத்தில் வாழ்கிறோம். ஆகவே நம்மைச் சுற்றிலும் உலாவருகிற அனைத்துக் காரியங்களையும் சிரமம்பாராமல் உற்று நோக்கி ஆராய்ந்து பார்ப்பதற்கு நேரத்தை ஒதுக்க வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் இந்த பிரபஞ்சத்தின் தொடக்கத்திலிருந்தே **தெளிவாகத் தெரிகிற** தேவனுடைய நித்திய வல்லமையையும், அதனுடைய தெய்வீக அம்சத்தையும் நாம் புரிந்துகொள்ள முடியும். தேவன் சிருஷ்டிகளிடத்தில் பதித்துவைத்திருக்கிற தம்முடைய **தெய்வீக முத்திரைகளை நாம் அலட்சியம் செய்வது இயலாத காரியம்**. துக்கமான காரியம் என்னவெனில், பல கோட்பாடுங்கள் இந்த உலகத்திற்குள் நுழைந்து, சிருஷ்டிப்பைப் பற்றிய நம்முடைய புரிதலை தடம் புரளச் செய்துவிட்டன. மேலும் இக்கோட்பாடுகள் நமக்கு என்ன தெரிந்திருக்கிறதோ அதைக் காட்டிலும் கூடுதலாகத் தெரிந்ததைப்போல் பாவனை செய்யும் ஆணவக்காரர்களாக நம்மை மாற்றிவிட்டன.

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று **வேதத்தின் முதல் பக்கத்திலேயே மகத்துவமாகத் தொடங்கும் வார்த்தைகளை நாம் அங்கீகரிக்க வேண்டியது அவசியம்.**

தேவனை மனதார அங்கீகரித்து, அவரையே சிருஷ்டிகராக நாம் பணிந்துக்கொள்ள வேண்டும் என்பதே, ஆதியாகமம் 1:1 இல் கொடுக்கப்பட்டிருக்கும் மறைமுகமான கட்டளையாகும். இந்த அங்கீகரிப்பானது விசுவாசிகள் அவருடைய வல்லமையின் பிரமிப்பில் வாழவும், அவருடைய நோக்கத்திற்கும், தெய்வீக ஒழுங்கிற்கும் ஏற்ப தங்கள் வாழ்வைச் சீரமைக்கவும் வழிவகுத்துக் கொடுக்கிறது.

வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துதல்

ஆதியாகமம் 1:1 இல் கொடுக்கப்பட்டிருக்கும் மறைமுகமான கட்டளையை எவ்வாறு மதித்து நடக்கப்போகிறீர்கள்? (சங்கீதம் 33:6-9, 96:6-8, 8:1,3-4, சங்கீதம் 19)

இச்சங்கீதங்களில் காணப்படும் மறைமுகக் கட்டளைகளை அடிக்கோடிட்டுக் கற்றுக்கொள்ளவும்

2. நுண்நோக்கிய பிரதிபலிப்பு:

ஆதியாகமம் 1:1 கிறிஸ்துவைப் பற்றி நேரடியாக குறிப்பிடவில்லை என்றாலும், **கிறிஸ்துவின் பிரசன்னமும் அவருடைய செயல்களும், படைப்பின்போது இருந்தது** என்று புதிய ஏற்பாடு உறுதிப்படுத்துகிறது. "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது; அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்; சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" என்று யோவான் 1:1-3 கூறுகிறது. **இது, திரியேக தேவனின் சிருஷ்டிப்பின் போது கிறிஸ்து தெய்வீக வார்த்தையாக பங்கு பெற்றார் என்னும் உண்மையை வலுப்படுத்துகிறது.**

படைப்பின் தொடர்பில் கிறிஸ்துவின் பங்களிப்பைப் பற்றி கூறும் கீழ்க்கண்ட வேதபகுதிகளிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டதை எழுதுங்கள்:

- யோவான் 1:1-3 _____
- கொலோசேயர் 1:15-19 _____
- கொலோசேயர் 2:3 _____
- கொலோசேயர் 2:9 _____
- எபிரேயர் 1:3 _____

நடைமுறைப்படுத்துதல்:

இந்த வேதபகுதிகளில், இயேசு கிறிஸ்துவை உங்கள் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாக கண்டுகொண்டது, **உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை எதிர்கொள்வதற்கு எந்த வகையில் உதவுகிறது?**

_____

_____

_____

_____

_____

_____

_____

_____

3. பகிர்ந்துகொள்ளவும், கற்பிக்கவும் தயாராகுதல்

- தேவனை இந்தப் **பிரபஞ்சத்தின் சிருஷ்டிகராக அறிந்துகொண்டு அங்கீகரிப்பதும் அவரைப் பயபக்தியுடன் கனப்படுத்துவதிலுமே** உண்மையான ஞானம் தொடங்குகிறது (நீதிமொழிகள் 9:10). **எல்லா மனிதரும் மனபூர்வமான முறையில் தங்களுடைய படைப்பின் தேவனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.** இவ்வாறு செய்யாதவர்கள் தாங்கள் அறிந்த சிருஷ்டிகரை உதாசீனப்படுத்துகிறார்கள் (ரோமர் 1:18-21).
- **தேவனை சிருஷ்டிகராக ஒப்புக்கொண்டு, அவரை நாம் பயபக்தியுடன் கனப்படுத்த வேண்டும்** என்பதே வேதவசனம் (ஆதியாகம் 1:1) நமக்கு அளிக்கும் தெளிவான கட்டளையாகும்.
- விசுவாசிகள் **தேவனை சிருஷ்டிகராக அங்கீகரிப்பதன் விளைவாக, அவருடைய வல்லமையின் பிரமிப்பைக் கண்டு அவரைக் கனப்படுத்துவதுடன், அவருடைய தெய்வீக ஒழுங்கிற்கும் நோக்கத்திற்கும்** ஏற்ப

தங்களது வாழ்வை மாற்றி அமைத்துக்கொள்கிறார்கள்.

இவ்வாறு இருப்பினும், மனிதகுலத்தில் தோன்றிய பல கோட்பாடுகள் தேவனை சிருஷ்டிகராக அங்கீகரிப்பதைத் தடுத்து வந்திருக்கின்றன. அவர்கள் தங்கள் சிருஷ்டிகரை அறிந்துகொள்வதற்கும் அவருக்கு நேராக வழிநடத்தவும் யார் உதவி செய்ய முடியும்?

கற்றுக்கொண்டதைச் செயல்படுத்துதல்

இந்தப் பாடத்தின் மூலமாக நீங்கள் கற்றுக்கொண்டதை, **தேவனே இந்த வானத்தையும் பூமியையும் படைத்தார் என்று அறியாத ஒருவருக்கு விவரித்து கூறுவதற்கு எவ்வாறு உங்களை ஆயத்தம் செய்வீர்கள்?**

ஆவிக்குரிய காரியங்களை

கூடுதலாக அறிந்துகொள்வதற்கான வாசிப்பு

"ஆரம்பம்" என்று பொருள் தருகிற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்ததே **"ஆதியாகமம்"** என்னும் வார்த்தையாகும். கி. மு. மூன்றாம் நூற்றாண்டில், எபிரெய வேதாகமத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பான எழுபதின்மர் "செப்துவஜிந்த்", மொழிபெயர்ப்பில் இந்த முதல் புத்தகத்திற்கு ஆதியாகமம் என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆதியாகமத்தில் பல ஆரம்பங்களின் வரலாறு சொல்லப்பட்டுள்ளதால் இது ஆரம்பங்களின் புத்தகம் என்று அழைக்கப்படுகிறது. நாம் காண்கிற இந்த உலகம் உண்டாவதற்கு முன்னரே, **பிதாவாகிய தேவன்** (அப்போஸ்தலர் 4:24), **தம்முடைய குமாரன்** மூலமாகவும் (கொலோசேயர் 1:16; எபிரேயர் 1:2), ஜீவனைத் தரும் **பரிசுத்த ஆவியானவரின்** செயலின் மூலமாகவும், தம்முடைய சிருஷ்டிப்பின் பணியைத் தொடங்கினார்.

கடவுளுடைய தெய்வீக பண்புகளில் ஒன்று அவருடைய இறையாண்மை. **இறையாண்மை உள்ளவர் என்பதற்கு** ஆட்சியாளர், அரசர், ஆளுகை செய்கிறவர் எனப் பல பொருள்கள் உள்ளன. ஆகவேதான் "தேவனே எல்லாவற்றையும் ஆளுகை செய்கிறார்" என வேதாகமம் பல முறைகள் விவரிக்கிறது. "யாவே" அல்லது **"யெகோவா"** என்னும் கிரேக்கப் பெயரே நமது தமிழ் வேதாகமம்தில் "கர்த்தர்" (எல்லாவற்றிற்கும் காரணமானவர்) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கடவுளைக் குறிக்கக்கூடிய இந்த, **"கர்த்தர்"** என்ற வார்த்தை குறிப்பாக இயேசு கிறிஸ்துவின் பெயராக **7,000 தடவைகளுக்கு மேல்** வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் கடவுளின் இறையாண்மையைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், நாம் அவருடைய கர்த்தத்துவத்தை கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது கர்த்தருடைய பண்புகளைப் புரிந்துகொள்வது. இந்தக் குணங்களே ஒருவரைக் கடவுள் நிலைக்கு உயர்த்தக்கூடியதாக தன்மைகளாக உள்ளது. வேதாகமத்தின் முக்கிய கருப்பொருளான "தேவனுடைய இறையாண்மை" அல்லது "கர்த்தத்துவம்" என்பது, எல்லா இடங்களிலுமுள்ள **தேவனுடைய ஆளுகை, எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய அதிகாரம், எங்கும் நிறைந்திருக்கிற அவருடைய பிரசன்னம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது. ஆகவேதான் கடவுளை நாம், எல்லாம் அறிந்தவர், எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர்** என்று அழைக்கிறோம்.

கற்றுக்கொண்டதைச் செயல்படுத்துதல்

தேவனுடைய இறையாண்மையின் அதிகாரத்தின்கீழ் வாழ்வதைக் குறித்து நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள்?

தேவனுடைய அதிகாரத்திற்குக் கீழாக நாம் வாழ்வது ஏன் சிறந்த திட்டமாகக் கருதப்படுகிறது?

நீங்கள் நினைவில்கொள்ள வேண்டிய சிந்தனை

“தேவனுடைய ஞானத்தை” என்னுடைய வாழ்வில் அப்பியாசப்படுத்துதல்

டாக்டர் வெர்னோன் மெக்கீயின் சிந்தனைகள்:



“வேதவாக்கியங்களெல்லாம், “உபதேசத்துக்கும், கடிந்துக்கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கின்றன” (2 தீமோத்தேயு 3:16,17). இது புவியியலைப் பற்றியோ அல்லது உயிரியிலைப் பற்றியோ உங்களுக்குக் கற்றுக்கொள்வதற்காக எழுதப்படவில்லை. இது மனிதனுக்கும் தேவனுக்கும் இடையேயுள்ள உறவை விவரிப்பதற்காகவும், தேவன் கட்டளையிட்டதை மனிதன் நிறைவேற்றுவதற்கும், அவன் இரட்சிக்கப்படுவதற்காக என்ன செய்ய வேண்டும் என்பதற்காகவுமே எழுதப்பட்டிருக்கிறது.”


ஆதியாகமம்
1:2-31

உங்கள் படிப்பிற்கான திட்டமிடல்

வேத பகுதி: ஆதியாகமம் 1: 2-25
வேத வாசிப்பு நேரம்: 10-15 நிமிடங்கள்

ஜெபம்

நாம் படிக்கத் தொடங்குவதற்குமுன், தேவனுடைய தெய்வீக திட்டத்தைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக நமது இருதயங்களையும் எண்ணங்களையும் காதுகளையும் கண்களையும் வழிநடத்தும்படி ஒரு நிமிடம் ஜெபம் செய்வோம்.

சிந்தனைக்குரிய வேத வசனம்

பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது ஆழத்தின்மேல் இருள் இருந்தது தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.

~ ஆதியாகமம் 1:2

1 இந்த வசனத்திலிருந்து வேதம் போதிப்பது என்ன?

ஆதியாகமம் 1:1 க்கும் 1:2 க்கும் இடையில் ஒரு நீண்ட இடைவெளி காலம் இருந்திருக்கும் என டாக்டர் வெர்னோன் மெக்கி நம்புகிறார்

"ஒழுங்கின்மை"
(டோகு)
(எபிரெயம் - டோகு - Tohu)
என்பதற்கு சேதமடைதல், வெற்றிடம், குழப்பம் என்று பொருள்

"வெறுமை"
(போகு)
(எபிரெயம் - போகு - Bohu)
என்பதற்கு வெறுமை, பாழ்படுத்தப்படுதல் என்று பொருள்

"தேவனாகிய கர்த்தர் பூமியை வெறுமையாக இருக்க "சிருஷ்டியாமல்" என ஏசாயா புத்தகத்தில் வாசிக்கிறோம் (ஏசாயா 45:18). இவ்வசனத்தின் வாயிலாக, தேவன் பூமியை பூரணமாகவும் குடியிருப்புக்கு ஏற்றதாகவுமே படைத்தார் எனப் புரிந்துகொள்கிறோம். ஆனால் இதற்கு பின்னர் ஏதோ ஒரு காரணத்தால் அங்கு ஒழுங்கின்மையும் வெறுமையும் ஏற்பட்டது என்று தெரியவருகிறது.

இருள்

தேவனுடைய பிரசன்னம்

இல்லாததற்கு அடையாளமாயிருக்கிறது

2

இருள் தேவனுடைய பிரசன்னம் இல்லாததற்கு அடையாளமாயிருக்கிறது "ஆழத்தின் மேல் இருள் இருந்தது" (ஆதி. 1:2)

"தேவனின் பிரசன்னம் இல்லாத நிலையே இருள்" என்று டாக்டர் வெர்னோன் மெக்கி விளக்குகிறார். இது தேவனுடைய நியாயதீர்ப்பின் விளைவாகும். ஆகவே தான் இது ஒழுங்கற்றதாக மாறிவிட்டது.

லூசிபரின் வீழ்ச்சியும், ஆதாமுக்கு முந்தைய காலத்தை பற்றிய கருத்துகளும்

3

"ஆதாமுக்கு முன்னரே உயிரினம் பூமியில் இருந்திருக்கலாம்" என்று டாக்டர் மெக்கி கூறுகிறார்.

ஆதாமின் முந்தைய கால பேரழிவுக்கும், லூசிபரின் (சாத்தானின்) வீழ்ச்சிக்கும் தொடர்பு இருக்கலாம் என்று டாக்டர் மெக்கி மேலும் கூறுகிறார்.

தேவனுக்கு எதிரான சாத்தானின் கலகத்தினால் அல்லது கிளர்ச்சியினால் ஒட்டுமொத்த பிரபஞ்சமே பாதிக்கப்பட்டிருக்கலாம்.

பரிசுத்த ஆவியானவரின் கிரியை - படைப்பில் ஆவியானவரின் பங்களிப்பு

4

"தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்" (ஆதியாகமம் 1:2).

இங்கே சொல்லப்பட்டுள்ள "அசைவாடுதல்" என்பதற்கு ஒரு கோழி தன் குஞ்சுகளை தனது செட்டைகளால் அரவணைத்தல் என்ற பொருளைக் குறிக்கிறது.

பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் மறு சிருஷ்டிப்பை தொடங்கி வைத்தது.

5 ஆவிக்குரிய படிப்பினை - பரிசுத்த ஆவியானவரின் மூலம் மறுபிறப்பு உண்டாகுதல்

பரிசுத்த ஆவியானவரின் மறு சிருஷ்டிப்பும், **ஆவிக்குரிய மறுபிறப்பும்** ஒன்றுக்கொன்று இணையானது என்று டாக்டர் மெக்கி விவரிக்கிறார்.

"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் **தேவனுடைய ராஜ்யத்தில்** பிரவேசிக்க மாட்டான்" (யோவான் 3:5).

ஜலம் (தண்ணீர்) = தேவனுடைய வார்த்தை
ஆவி = பரிசுத்த ஆவியானவர்

பரிசுத்த ஆவியானவர் பூமியை சிருஷ்டித்தது போலவே, நம்மிலும் இரட்சிப்பு என்னும் மறுபிறப்பை உருவாக்குகிறார்.

ஆதியாகமம் 1:2 க்கும் இரட்சிப்புக்கும் உள்ள தொடர்பு

3 பூமி உருவாக்கத்தின் நிலைகள்


ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் சிருஷ்டிப்பின் தொடர்பில் மூன்று வித்தியாசமான நிலைகள் இருப்பதை டாக்டர் மெக்கி சுட்டிக்காட்டுகிறார்.

நிலை 1



பிரபஞ்சம் படைக்கப்படுதல்
தேவன் ஆதியிலே வானம், பூமி உட்பட எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்
(ஆதியாகமம் 1:1).

நிலை 2



பூமிக்கு ஏற்பட்ட சிதைவு
பூமியில் ஏற்பட்ட ஒரு பேரழிவினால் அது "ஒழுங்கின்மையும் வெறுமையுமாக" மாறிவிட்டது
(ஆதியாகமம் 1:2).

நிலை 3



பூமி மறுசீரமைக்கப்படுதல்
தேவன் பூமியை ஆறு நாட்களில் மீண்டும் புதுப்பித்துச் சீர்ப்படுத்தினார்
(ஆதியாகமம் 1:3-31
யாத்திராகமம் 20:11).

6 நாள் படைப்பும் அதன் தெய்வீக ஒழுங்கும்

படைப்பில் காணப்பட்ட ஒழுங்குமுறை, வளர்ச்சி, கச்சிதமான நேரம் மற்றும் பரிபூரணம் ஆகியவற்றை டாக்டர் மெக்கி நமக்கு எடுத்துச் சொல்கிறார்.

சிருஷ்டிப்பில் சொல்லப்பட்டுள்ள ஒரு நாள் நேரங்கள் கொண்ட நாளாகும்.

24 மணி

படைப்பில் சொல்லப்பட்டுள்ள நாட்கள் என்பது 24 மணி நேரங்களை கொண்ட ஒரு நாளையே குறிப்பிடுகிறது என்பதை டாக்டர் மெக்கி உறுதிப்படுத்துகிறார் (யாத்திராகமம் 20:11).

"24 மணி நேரங்களை கொண்ட ஒரு நாள்" என்பதை தவிர வேறு எந்த அர்த்தமும் இதற்குக் கிடையாது என்றே கருதுகிறேன்" என அவர் மேலும் வலியுறுத்துகிறார்.

"ஆறு நாள் என்பது" ஒரு நீண்ட யுகத்தை அல்லது ஒரு குறிப்பிட்ட நீண்ட கால அளவைக் குறிப்பிடுவதற்கு அடையாளமாகச் சொல்லப்படுகிறது என்று சொல்லப்படும் விளக்கங்களுக்கு இவரது விளக்கம் முற்றிலும் மாறானது ஆகும்.

சிருஷ்டிப்பில் வெளிப்பட்ட தேவ கட்டளை: **“உண்டாகக்கடவது”.**

ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் “உண்டாகக்கடவது” என்னும் கட்டளை பத்து முறை இடம்பெற்றுள்ளது.

வெளிச்சம் உண்டாகக்கடவது
ஆகாய விரிவு உண்டாகக்கடவது
கனி விருட்சங்களும் உண்டாகக்கடவது
வானத்தின் கீழே இருக்கிற
ஜலம் ஓரிடத்தில் சேரக்கடவது

... இவை போன்று இன்னும் சில

சிருஷ்டிப்பின் போது வெளிப்பட்ட இந்த 10 தெய்வீக கட்டளைகள்

தேவனுடைய பத்து கற்பனைகளுடன் ஒப்பிடப்படுகின்றன.

இவை “சிருஷ்டிப்பின் 10 கட்டளைகள்” என்று அழைக்கப்படுகின்றன.

“தேவன் தம்முடைய வாயின் வார்த்தைகளால் இந்த உலகத்தை படைத்தார்.” இது படைப்பில் அவருக்கு இருந்த முழுமையான அதிகாரத்தை வலியுறுத்துகிறது.

நாள் 1 | வெளிச்சம்

(ஆதியாகமம் 1:3-5)



"குழப்பத்திலிருந்து ஒழுங்கை கொண்டு வர தேவன் பேசினார்" என்று இதன் முக்கியத்துவத்தை டாக்டர் மெக்கி அவர்கள் வலியுறுத்துகிறார்.

நாள் 2 | ஆகாய விரிவு


(ஆதியாகமம் 1:6-8)



மூன்று வானங்கள் இருக்கின்றன
என வேதாகமம் கூறுகிறது.



வளிமண்டலம்
(பறவைகள் பறக்கிற இடம்)



விண்வெளி மண்டலம்
(நட்சத்திரங்கள் இருக்கிற இடம்)



பரலோகம்
(தேவன் வாசம்பண்ணுகிற இடம்)

ஆறு நாள் படைப்பும் அதன் தெய்வீக ஒழுங்கும்


நாள் 3 | வெட்டாந்தரை மற்றும் தாவர வகைகள்

ஆதியாகமம் 1:9-13



நாள் 4 | சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்

(ஆதியாகமம் 1:14-19)



நாள் 5 | கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் பறவைகள்

(ஆதியாகமம் 20-23)



நாள் 6 | நிலத்தில் வாழும் உயிரினங்கள் மற்றும் மனிதன்

(ஆதியாகமம் 1:24-31)



ஒரு தனிச்சிறப்பான நிகழ்வு: மனிதன் படைக்கப்படுதல்

ஆதியாகமம் 1:26-27 "தேவன் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார்".

"மனிதன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டான்."

இது வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள மிகச் சிறப்பான ஒரு வாக்கியமாகும்.

தேவ சாயல் என்பதன் பொருள் என்ன?



மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் உடைய மூன்று அம்சங்களைக் கொண்டவன் (1 தெசலோனிக்கேயர் 5:23).

மனிதன் மனச்சாட்சியும், சுயாதீனமும், சன்மார்க்க ஒழுக்கமும் உடையவன்.

மனிதன் சிறப்பான ஆளுமைப் பண்பு உடையவன்


தேவன் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார்

“சிருஷ்டித்தார்” என்பதற்கான கிரேக்க வார்த்தை “பாரா” என்பதாகும்.

בָּרָא

(பாரா)

இவ்வார்த்தை வேதாகமத்தில் மூன்று தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.



ஆதியாகமம் 1:1 - கண்ணுக்குத் தெரிகிற பிரபஞ்சத்தை படைத்தபோது	ஆதியாகமம் 1:21- உயிரினங்களை உருவாக்கிய போது	ஆதியாகமம் 1:27 - மனிதனைப் படைத்தபோது

மனிதன் புதுமையானவன் மற்றும் விலங்குகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டவன்.

தேவன் மனிதனைச் சிருஷ்டித்த நிகழ்வை விவரமாகச் சொல்லி இருக்கிறார். ஆனால் பிரபஞ்சத்தைப் படைத்த விவரங்களை அவர் அவ்விதமாகச் சொல்லவில்லை. ஏன்?

ஏன்?

ஏனெனில், மனிதன் தனது ஆரம்பத்தையும் தன்னைப் படைத்தவரையும் அறிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பினார். இந்த பிரபஞ்சத்தை பற்றி அவர் இவ்வாறு அறிய விரும்பவில்லை.

தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்.

ஆணும் பெண்ணும் எவ்வாறு உருவாக்கப்பட்டார்கள் என்பதை ஆதியாகமம் 2ஆம் அதிகாரம் நமக்கு விரிவாகத் தருகிறது.

மனிதனுடைய சிருஷ்டிப்பு மிகவும் வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பிரபஞ்சத்தை பற்றிய விவரங்களோ மிகச் சுருக்கமாகவே சொல்லப்பட்டுள்ளது.

எபிரேயர் 11:3

“சிருஷ்டிப்பு ஒன்றுமில்லாமையில் இருந்து உருவாக்கப்பட்டது”
(ex nihilo)

தேவனுடைய ஆசீர்வாதமும் பலுகிப் பெருகுங்கள் என்ற கட்டளையும்




ஆதியாகமம் 1:28: **"**பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்**"**.

படைப்பில் தேவன் **மனுக்குலத்திற்கு ஒரு சிறப்பான பங்களிப்பை** தந்திருக்கிறார்

பாலினமும் இனப்பெருக்கமும் தேவனால் திட்டமிடப்பட்டது. அது ஒரு புதிய கண்டுபிடிப்பு அல்ல.


தேவன் பாலுணர்வை பரிசுத்தமானதாகவும் அழகானதாகவும் இருக்கும்படி கொடுத்திருக்கிறார் ஆனால் **சமுதாயமோ அதை கீழ்த்தரமானதாகவும் கனவீனமானதாகவும்** ஆக்கிவிட்டது.

மனிதகுலம் தொடர்ந்து நிலைத்திருப்பதற்காக தேவன் **நான்கு விதமான வழிகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்.**



தேவ சாயலில் உண்டாக்கப்பட்டவன் என்ற முறையில் மனிதனுக்கு உள்ள சன்மார்க்க ஒழுக்க பொறுப்பு

தேவன் மனிதனை தம்முடைய சாயலாக சிருஷ்டித்தார். இதன்மூலம் மனிதன் பெற்றிருந்தவை:



"பூமியைப் பழைய நிலைக்குத் திரும்ப கொண்டுவருதல்" என்பதன் பொருள்

ஆதாமுக்கு முன் இருந்த நிலைக்குத் திருப்புதல்

இது ஆதாமுக்கு முந்தைய உலகம்
அழிவுக்குள்ளாக்கப்பட்டது என்ற கருத்தை ஆதரிக்கிறது.

பூமியில் மனிதனின் பங்களிப்பு: பண்படுத்துதல்

தேவன் மனிதனை நோக்கி, "நீங்கள் இந்த பூமியை ஆளுகை செய்து அதை பண்படுத்துங்கள்" என்று கட்டளையிட்டார்.



இது அறிவியல் கண்டுபிடிப்புகளை உள்ளடக்கியது.

"காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை" (நீதிமொழிகள் 25:2).

ஆராய்ச்சி செய்யவும் கற்றுக்கொள்ளும் ஆர்வமும்

தேவன் மறைவாக வைத்திருக்கிற காரியங்களை ஆராய்ந்து வெளிக்கொண்டுவர **மனிதனுக்குப் அறிவும் ஆர்வமும்** கொடுக்கப்பட்டிருக்கிறது.

சிருஷ்டிகளின் மேல் ஆளுகை

தேவன் ஆதாமிடம் பூமியை ஆளுகை செய்யும் அதிகாரத்தை கொடுத்தார். **அதாவது பூமியை ஆளுகை செய்யும்படியாகவே ஆதாம் படைக்கப்பட்டான்.**

ஆதாம் தோட்டத்தை அழகுபடுத்தும் ஒரு தோட்டக்காரனைப் போல படைக்கப்படவில்லை மாறாக, அவன் அதை ஆளுகை செய்கிறவனாக படைக்கப்பட்டான்.

ஆதாமின் வீழ்ச்சிக்குமுன் இயற்கையின் மீது முழுமையான அதிகாரம் பெற்றிருந்தான்.

இந்த ஆளுகையை இயேசு கிறிஸ்து பூமியில் இருந்தபோது நிறைவேற்றினார்



"அவர் காற்றையும் கடலையும் அமைதிப்படுத்தினார்"
(மாற்கு 4:39)



"அப்பங்களையும், மீன்களையும் பெருகப்பண்ணினார்"
(யோவான் 6:1-14)

பாவம் உலகத்தில் பிரவேசிப்பதற்கு முன்னர் **ஆதாம் இதே அதிகாரத்தைப்** பெற்றிருக்கக்கூடும்.

ஆதியில் மனித குலத்துக்கு இருந்த உணவு பழக்கம்

ஆதியாகமம் 1:29: "பின்னும் தேவன்: இதோ, பூமியின்மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது".



ஆதியில் மனிதன் சைவ உணவு சாப்பிடுகிறவனாக இருந்தான்.

ஜலபாளையத்துக்கு பின்னரே மனிதர் அசைவு உணவு உண்ணத் தொடங்கினர் (ஆதியாகமம் 9:3).

எல்லா ஜீவராசிகளையும் தேவன் போஷித்து காப்பாற்றுகிறார்

ஆதியாகமம் 1:30: "பூமியிலுள்ள சகல மிருகஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தேன் என்றார் அது அப்படியே ஆயிற்று**"**.

தேவன் எல்லா உயிரினங்களுக்கும் உணவு அளித்துப் பராமரிக்கிறார். அதாவது ஆதியிலே **மனிதனுக்கும் விலங்குகளுக்கும்** சைவ உணவுப் பழக்கமே இருந்தது.

தேவன் தம்முடைய அனைத்துச் சிருஷ்டிகளுக்கும் **உணவளித்துப் பாதுகாக்கிறார்** என்பதை இது வலியுறுத்துகிறது.

தேவன் தம்முடைய சிருஷ்டிகளுக்கு அளித்த இறுதி நற்சான்று

ஆதியாகமம் *1:31*: "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று".

ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளபடி, தேவன் தம்முடைய சிருஷ்டிகளை, **"நல்லது"** என்று கண்டார். மிகவும் நன்றாயிருந்தது என இந்த ஒரு முறை மட்டுமே சொல்லி இருக்கிறார். இது அவருடைய படைப்புகள் பூரணமாகவும் நேர்த்தியாகவும் இருந்தன என்பதை காட்டுகிறது.

தேவன் படைத்த உலகத்தில் பாவம் இல்லை, பாடுகள் இல்லை, மரணம் இல்லை உலகமானது தன் நிலையில் பூரணமாய் இருந்தது.

வேதாகமம் தேவன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது

ஆதியாகமம் 1ஆம் அதிகாரத்தில் **தேவன் மற்றும் தேவனை குறிக்கிற பெயர்கள் 32 முறை** இடம் பெற்றுள்ளன.

வேதாகமம் தேவன் இருக்கிறார் என்பதை ஒருபோதும் நிரூபிக்க முயன்றதில்லை ஆனால் அது அதை உறுதிப்படுத்துகிறது.

சங்கீதம் 14:1 **"**தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்கிறான்**"**.

தேவனே இந்த உலகத்தை படைத்தார் என்பதை ஏற்றுக்கொள்வதற்கு **விசுவாசம் அவசியமாய் இருக்கிறது.**

தேவனுடைய படைப்புகள் அவருடைய வல்லமையையும் அவரது தன்மையையும் வெளிப்படுத்துகின்றன

ரோமர் 1:20: "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும் ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை".

எனவே தேவன் இருக்கிறார் என்பதை ஒருவரும் மறுத்து பேச முடியாது.

தேவன் இருக்கிறார் என்பதற்கு இந்த **உலகமே சாட்சியாய் இருக்கிறது**. இந்த உலகத்தில் அவருடைய வல்லமை, ஞானம், தெய்வீகத்தன்மை ஆகியவை அடங்கியுள்ளன.

ஆதியாகமம் முதலாம் அதிகாரம் பல உலக கண்ணோட்டங்களை மறுக்கிறது

பல தேவர்கள் கொள்கை: இது பல தேவர்கள் இருக்கிறார்கள் என்பதை மறுக்கிறது. எல்லாவற்றையும் படைத்த **ஒரே தேவன் மட்டுமே** இருக்கிறார் என்பதை தெளிவுபடுத்துகிறது.

.

நித்திய பொருண்மை வாதம்: சகலமும் நித்தியத்திலேயே இருந்தன என்னும் கோட்பாட்டை இது மறுக்கிறது. "ஆதியிலே" என்ற வார்த்தை, **பொருளுக்கு ஒரு ஆரம்பப்புள்ளி இருக்கிறது** என்பதைத் தெரிவிக்கிறது.

அனைத்திலும் தேவன்: எல்லாவற்றிலும் தேவன் இருக்கிறார் என்னும் கோட்பாட்டை இது மறுக்கிறது. தேவன் **தன்னுடைய படைப்புகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்**. அவர் நம்முடைய படைப்புகளில் ஒரு பகுதி அல்லர்.

விதிக் கோட்பாடு: எல்லாம் விதியின் அடிப்படையில் நடைபெறுகின்றன என்பதை மறுக்கிறது. **தேவன் தம்முடைய சித்தத்தின்படியே செயல்படுகிறார்.** நிகழ்தகவு அல்லது வாய்ப்புகளின் அடிப்படையில் எதுவும் ஏதேச்சையாய் நடைபெறுவதில்லை.

ஆதியாகமம் 1ம் அதிகாரத்திலுள்ள சில குறிப்பிடத்தக்க அம்சங்கள்

டாக்டர் வெர்னோன் மெக்கி, ஆதியாகமம் 1:2-31 வரை உள்ள பகுதிகளில் இருந்து நான்கு முக்கியமான சிறப்பு அம்சங்களை சுட்டி காட்டுகிறார்.

1

ஒழுங்குமுறை
சிருஷ்டிப்பு ஒரு கட்டமைக்கப்பட்ட தர்க்கரீதியான வரிசையை பின்பற்றுகிறது

2


வளர்நிலை முன்னேற்றம்
ஒவ்வொரு நாள் திருஷ்டிப்பும் முந்தையத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னேற்றம் அடைந்து செல்கிறது

3

கச்சிதமான நேரம்
தேவன் பேசிய அதே நேரத்தில் உடனடியாக நிறைவேறின.

4

பரிபூரணம்
தேவனுடைய படைப்புகளில் எவ்வித குறைபாடும் இல்லை அவற்றில் எவ்விதப் பாவமும் இல்லை.



சிந்தித்தலும் செயல்படுத்துதலும்

1. சிந்தித்தல் - சிருஷ்டிப்பில் தேவனுடைய மகத்துவம்

ஏசாயா 40 ஆம் அதிகாரம் தேவனுடைய மகத்துவத்தை சக்தி வாய்ந்த முறையில் அறிவிக்கிறது. தண்ணீர்களை தமது கைப்பிடியால் அளக்கிறார் என்றும் அவர் வானங்களை மெல்லிய திரையாக பரப்புகிறார் என்றும் நமக்கு நினைப்பூட்டுகிறது (வசனம் 12,22). அவ்வாறே ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரம் வசனங்கள் 2 முதல் 31 வரை உள்ள வசனங்களை காண்கிற பொழுது படைப்பில் எவ்வாறு அவருடைய தெய்வீக ஒழுங்கு, வளர்நிலை முன்னேற்றம், கச்சிதமான நேரம் மற்றும் பரிபூரணமும் விளங்குகிறது என்பதை காண்கிறோம்.

- ஒழுங்கு: தேவன் பிரபஞ்சத்தை ஒரு சிறந்த ஒழுங்கான கட்டமைப்புடன் அமைத்திருக்கிறார் அவர் ஏதொன்றையும் தோராயமாக உண்டாக்கவில்லை.
- வளர்நிலை முன்னேற்றம்: அவர் ஒவ்வொன்றையும் குறிப்பிட்ட நோக்கத்துடனும் ஒவ்வொன்றின் தொடர்ச்சியாக மற்றொன்றையும் உருவாக்கியிருக்கிறார்.
- கச்சிதமான நேரம்: அவர் தம்முடைய வார்த்தையினால் எல்லாவற்றையும் உருவாக்கினார். இதற்கு நீண்டகாலம் எதுவும் ஆகவில்லை. மாறாக அவர் சொன்ன மாத்திரத்தில் உடனடியாக எல்லாம் உருவாகின.
- பரிபூரணம்: பாவம் பிரவேசிப்பதற்கு முன் இந்த உலகம் எவ்வித பழுதும் பிழையும் அற்ற நேர்த்தியானதாக இருந்தது.

படைப்பில் செயல்பட்ட தேவனுடைய வல்லமையை நீங்கள் புரிந்துகொண்டது உங்கள் வாழ்க்கையை எவ்வாறு மாற்றியுள்ளது?

நடைமுறைப்படுத்துதல்

ஏசாயா 40:26: "உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத்திட்டமாகப் புறப்படப்பண்ணி, அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிறவராமே அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது".

சிருஷ்டிப்பில் தேவனுடைய ஒழுங்கையும் அவருடைய வல்லமையும் அறிந்துகொண்டது, உங்கள் வாழ்க்கையைக் குறித்த அவருடைய திட்டத்தில் எவ்வாறு உங்களுக்கு நம்பிக்கையும் உறுதியையும் அளிக்கிறது?

தேவனுடைய செயலிலுள்ள ஒழுங்குமுறை, வளர்நிலை முன்னேற்றம், கச்சிதமான நேரம், மற்றும் பரிபூரணம் ஆகியவற்றைக் காண்கிறதினால், உங்கள் வாழ்க்கையின் எந்த பகுதியை அவருக்கு ஒப்பு கொடுக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்?

அவருடைய செயல்களைச் சிந்தித்து அவருடைய மகத்துவதற்காக சில நிமிடங்கள் ஒதுக்கி சொல்லித் துதியுங்கள்.

2. சிந்தித்தல்: மனிதனை சிருஷ்டித்த தேவனின் நோக்கத்தை புரிந்துகொள்ளுதல்

ஆதியாகமம் 1:26-27 **"**பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார**"**.

மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் கொண்ட மூன்று தன்மை உள்ள சிறப்பானவனாக படைக்கப்பட்டிருக்கிறான் என்று திருவாளர் மெக்கி சுட்டிக்காட்டுகிறார் (1 தெசலோனிக்கேயர் 5:23). இதை

- அறிந்துகொள்ளுதல்: ஆவியினால் தேவனை அறிந்துகொள்வது அதாவது ஆவிக்குரிய உறவு
- புரிந்துகொள்ளுதல்: ஆத்துமாவின் மூலமாக அதாவது சிந்தை, உணர்ச்சி, சித்தம், ஆகியவற்றின் வாயிலாக தேவ சித்தத்தைப் புரிந்துகொள்ளுதல்
- செயல்படுதல்: தேவனுடைய நோக்கத்துக்கு ஏற்ப இந்த உலகத்தில் சரீரப் பிரகாரமாக செயல்படுதல் அதாவது உலகத்துடன் தொடர்புகொள்ளுதல்

மனிதன் தேவனுடைய தெய்வீக அதிகாரத்தைப் பிரதிபலிக்கும்படியாக படைக்கப்பட்டிருக்கிறான். அதாவது பூமியை ஆளுகை செய்யவும், அதைப் பண்படுத்தவும், தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய உக்கிராணாக்காரனாகவும் சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எவ்வாறு இயற்கை மீது ஆளுகை செலுத்தினாரோ, அவ்வாறே ஆதாம் பாவத்தில் விழுவதற்கு முன் அதிகாரம் உடையவனாக இருந்தான் (மாற்கு 4:39 யோவான் 6:1-14).

நாம் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டிருக்கிறோம் என்னும் அறிவு உங்கள் வாழ்க்கையில் எவ்விதமான மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கிறது?

நடைமுறைப்படுத்துதல்

நீதிமொழிகள் 25:2: "காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை".
தேவனுடைய மறைவான பொக்கிஷங்களை குறித்து கற்றுக்கொள்வதற்கும், பின்பு அதை விவரிப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமான திறமைகளை நமக்கு வழங்கி இருக்கிறார்.

- உங்கள் சிந்தையினாலும் இருதயத்தினாலும் சரிநிறுத்தினாலும் தேவனை மையப்படுத்துவதற்கு அவற்றை எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள்?
- உங்களது சுயவிருப்பம், சன்மார்க்க ஒழுக்கம் ஆகியவற்றை கொண்டு கிறிஸ்துவின் சாயலில் வளர்வதற்கு எவ்வாறு பயன்படுத்த போகிறீர்கள்?



குறிப்பு: தேவன் நம்மை அவருடைய சாயலில் உருவாக்கி இருக்கிறார். அதற்காக நன்றி சொல்லி நம்முடைய ஆவி ஆத்மா சரீரத்தினால் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உதவி கேட்டு ஜெபம் செய்வோமாக.

3. பயின்றதைப் பகிர்ந்துகொள்ளுதல்:
ஆதியாகமம் முதலாம் அதிகாரம் கூறும் சத்தியத்தை நிலைநாட்டுதல்

ஆதியாகமம் 1:2-31 தேவனுடைய அமைப்புமுறையை விவரிப்பது மட்டுமின்றி, உலகம் கொண்டிருக்கிற தவறான கண்ணோட்டத்தையும் உடைத்துப் போடுகிறது.

- ஒரே தேவன் - எல்லாவற்றையும் ஒரே மெய்யான தேவனே உண்டாக்கினார். இது பல தேவர்கள் உலகத்தில் இல்லை என்பதை அறிவிக்கிறது.
- பொருண்மை வாதம் - "ஆதியிலே" என்ற வார்த்தை இந்த பிரபஞ்சத்துக்கு ஒரு தொடக்கம் இருக்கிறது என்பது வெளிப்படுத்துகிறது படைக்கப்பட்ட பொருட்கள் நித்தியமானவை அல்ல.
- தேவனுடைய தனித்துவம் - தேவன் தம்முடைய படைப்புகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டவராக இருக்கிறார் அவர் படைப்புகளில் ஒருவர் அல்ல எனவே படைப்புகள் எல்லாம் தேவனாக முடியாது.

- தேவனுடைய இறையாண்மை - சிருஷ்டிப்பு தேவனுடைய சித்தத்தினாலேயே அல்லது அவர் விருப்பப்படியே நடைபெற்றது. ஏதேச்சையாகவோ தற்செயலாகவோ, விதியினாலேயோ உண்டாக்கப்படவில்லை.

ஆதியாகமம் 1ஆம் அதிகாரம் கூறும் சத்தியங்களையும், உலக கண்ணோட்டங்களாகிய பல தேவர்கள் கொள்கை எல்லாம் இறைவிதி போன்றவற்றையும் வேறுபடுத்தி காண்பித்து எவ்வாறு பிறருக்குக் கற்றுக்கொடுப்பீர்கள்?

நடைமுறைப்படுத்துதல்

பல்வேறு நம்பிக்கைகளால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிற உலக மக்கள் தேவனுடைய சத்தியத்தை கண்டுகொள்ள எவ்வாறு உதவி செய்வீர்கள்?

தேவனுடைய சிருஷ்டிப்பின் சத்தியங்களை புரிந்து கொள்வதற்கு ஏதுவான ஞானத்தையும் தெளிவையும் தரும்படி ஜெபியுங்கள்

உங்கள் வாழ்க்கையில் அனுபவமாக்குதல்

தேவனுடைய ஞானத்தை எனது வாழ்க்கையில் அனுபவமாக்கிக்கொள்ளுதல்

டாக்டர் வெர்னோன் மெக்கியின்
மேற்கோள்கள்:



“ ஆதியாகமம் 1ஆம் அதிகாரத்தில், தேவன் தம்முடைய பெயரை 32 தடவைகள் குறிப்பிட்டிருப்பது ஒரு முக்கியமான சத்தியமாகும். தேவன் இருக்கிறார் என்பதை வேதம் ஒருபோதும் மெய்ப்பிக்க முயல்வதில்லை. ஏனெனில், தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான். ”

சங்கீதம் 14:1


ஆதியாகமம்
2:1-25

உங்கள் படிப்பிற்கான திட்டமிடல்

வேத பகுதி: ஆதியாகமம் 2:1–25
வேத வாசிப்பு நேரம்: 30–35 நிமிடங்கள்

ஜெபம்

நாம் படிக்கத் தொடங்குவதற்குமுன், தேவனுடைய தெய்வீக திட்டத்தைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக நமது இருதயங்களையும் எண்ணங்களையும் காதுகளையும் கண்களையும் வழிநடத்தும்படி ஒரு நிமிடம் ஜெபம் செய்வோம்.

சிந்தனைக்குரிய வேத வசனம்

"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்."

– ஆதியாகமம் 2:7

மறுநிகழ்வின் விதி

தேவனுடைய வெளிப்பாட்டின் விதிமுறைமைகள்

ஆதியாகமம் 2ஆம் அதிகாரத்தில் சிருஷ்டிப்பின் விவரங்கள் மறுபடியும் ஏன் சொல்லப்பட்டுள்ளன?

மறுநிகழ்வு விதி எனப்படும் தேவனுடைய வெளிப்பாட்டின் மாபெரும் விதிமுறைகளின் படி இது மீண்டும் சொல்லப்பட்டுள்ளது.

தேவனுடைய ஆவியானவர் தம்முடைய வெளிப்பாட்டில், **முக்கிய உண்மைகளை முதலாவது சுருக்கமாகக் கூறி,** பின்னர் அதிலுள்ள **ஒரு குறிப்பிட்ட அம்சத்தை விரிவாக** விளக்கிக் கூறுகிறார்.

இந்த முறையை வேதாகமம் முழுவதிலும் ஆங்காங்கே இருப்பதைக் காணலாம்.

உபாகமப் புத்தகம் - இதில் நியாயப்பிரமாணம் மீண்டும் சொல்லப்படவில்லை. ஆனால் நாற்பது ஆண்டுகளில் நடைபெற்றதை சுருக்கமாக மீண்டும் விவரிக்கிறது.

நான்கு சுவிசேஷ நூல்கள் – கிறிஸ்துவின் வாழ்க்கையையும் அவருடைய போதனைகளையும் நான்கு வெவ்வேறு அம்சங்களில் வலியுறுத்திக் காண்பிக்கின்றன.

ஓய்வு நாள்

ஓர் ஆவிக்குரிய இளைப்பாறுதல்



ஆதியாகமம் 2:1-3

"இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன. தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்."

தேவனுக்குச் சோர்வு ஏற்பட்டதினால் அவர் ஓய்வாயிருந்தாரா?

இல்லை!

"இல்லை" - தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியைகள் முழுமையாக முடிவடைந்துவிட்டதாலும், சிருஷ்டிக்கப்படுவதற்கு இனிமேல் எதுவும் தேவை இல்லை என்பதாலும் அவர் சிருஷ்டிப்பின் வேலையிலிருந்து ஓய்ந்திருந்தார்.

ஆவிக்குரிய சத்தியம்: இந்த ஓய்வு என்பது **கிறிஸ்துவில் நாம் பெறும் இளைப்பாறுதலை அடையாளப்படுத்துகிறது (எபிரேயர் 4:9-10).**
விசுவாசிகள் **தேவனுடைய பரிபூரண மீட்பில்** இந்த ஓய்வை (இளைப்பாறுதலை) அனுபவிக்கிறார்கள்

ரோமர் 5:1

"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்."

இரட்சிப்பிற்கான கிரியைகள் அனைத்தையும் கிறிஸ்து நிறைவேற்றி முடித்துவிட்டபடியால் **நாம் எந்த கிரியைகளும் செய்ய வேண்டியதில்லை.** எனவே இரட்சிப்பு பூரணமானதாக இருக்கிறது.

முதல் 5 நாட்களில் நடைபெற்ற மறுசீரமைப்பு நிகழ்வின் சுருக்கமான விவரங்கள்


ஆதியாகமம் 2:4

“தேவனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்கின நாளிலே, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே.”

சிருஷ்டிப்பு என்பது புதிதான ஒன்றல்ல, அது மறுஉருவாக்கம் அல்லது மறுபுத்தாக்கம்

தேவன் இந்தப் பிரபஞ்சத்தை முதலாவது படைத்ததற்கும் (ஆதியாகமம் 11), **அதன் பிறகான அவருடைய மறுபுத்தாக்கத்திற்கும் (ஆதியாகமம் 1:2-31) இடையில் எத்தனை ஆண்டுகள் இருந்தன என்பது அவருக்கு மட்டுமே தெரியும்.**





ஆதியாகமம் 1:2இல் சொல்லப்பட்டுள்ள, “ஒழுங்கின்மை” மற்றும் “வெறுமை” என்பது ஒரு மிகப்பெரிய பேரழிவுக்குப் பின்னான நிலையைக் காண்பிக்கிறது. இது பெரும்பாலும் **சாத்தானின் வீழ்ச்சியின்** விளைவாக ஏற்பட்டதாக இருக்கலாம்.

ஆதியாகமம் 1இல் சொல்லப்பட்டுள்ளவை:
தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியைகள்



ஒழுங்கின்மையிலிருந்து ஒழுங்கிற்கு கொண்டுவருதல்



மனுக்குலம் வசிப்பதற்கு ஏற்ற ஒரு வசிப்பிடத்தை உருவாக்குதல்



இனப்பெருக்கம் செய்யக்கூடிய தாவரங்கள், பறவைகள், விலங்குகளை உருவாக்குதல்

மனிதனைச் சிருஷ்டித்தல்

இது ஒரு தேவனுடைய நேரடியான செயல்




ஆதியாகமம் 2:7

"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்."

சிருஷ்டிப்பின் மூன்று வித்தியாசமான நிலைகள்

நிலை 1



கனிமம் சாராத பொருட்கள்
உயிரற்ற பிரபஞ்சம் படைக்கப்படுதல். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:1).

நிலை 2




கனிம உயிரினங்கள்
உயிர்வாழ்வன படைக்கப்படுதல். தேவன், மகா மச்சங்களையும், நீர் வாழும் ஜந்துக்களையும், சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:21).

நிலை 3



மனிதர்கள் சிருஷ்டிக்கப்படுதல்
"தேவன் மனிதனை விலங்குகளிடமிருந்து வேறுபட்டவனாகவும் தனித்துவமானவனாகவும் தம்மோடு உறவுக்கொள்ளக் கூடியவனாகவும் சிருஷ்டித்தார்" (ஆதியாகமம் 1:27,28).



மனிதனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது எது?

பரிணாமக் கோட்பாட்டால் இக்கேள்விக்கு விடையளிக்க இயலாது


- மனிதன் பேசுகிறவன்
- மனிதன் மனசாட்சி உள்ளவன்
- மனிதன் சுதந்தரமும் தனித்துவமும் உள்ளவன்

மனிதன் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டிருந்தாலும், அவன் மண்ணைக் காட்டிலும் மேன்மையானவன்

மனிதன் மண்ணைக் காட்டிலும் மேன்மையானவன்

மனிதன் **(மனித சரீரம்)** மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவன். ஆகவே மனிதன் மரித்த பிறகு மண்ணுக்கே திரும்புகிறான்.

ஆயினும், மனிதன் உயிரற்ற திடப்பொருளன்று. தேவன் அவனுக்கு ஓர் **ஆவிக்குரிய வாழ்க்கையைக்** கொடுத்திருக்கிறார். அவனுக்குள் ஆவி இருக்கிறது. அவன் மரித்தபின் இந்த ஆவி தேவனிடத்திற்குச் செல்லும்.



தேவனுடைய ஜீவ சுவாசம் மனிதனுக்கு ஜீவாத்துமாவைக் (அழியாத ஆத்துமாவைக்) கொண்டுவந்தது

ஆதியாகமம் 2:7
"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்."

தேவன் மனிதனுக்குள் ஜீவ சுவாசத்தை ஊதி, அவனை மற்ற எல்லா உயிரினங்களிலிருந்தும் வேறுபாடு உள்ளவனாக்கினார். எனவே "மனிதன் தன் படைப்பாளருடன் ஓர் அற்புதமான உறவை இப்பொழுது பெற்றுக்கொண்டான்".

தேவன் அருளிய வாழ்க்கையின் இரண்டு அம்சங்கள்

சரீரப்பிரகாரமான வாழ்க்கை - மனிதன் என்ற முறையில் சிந்திக்கவும், உணரவும், செயல்படவும் படியானஆற்றல்
ஆவிக்குரிய வாழ்க்கை - தேவனுடன் தொடர்புகொள்ளும் வாழ்க்கை மற்றும் அவரை ஆராதித்து அவருடன் இணைந்து நித்தியத்தில் வசிக்கும் வாழ்க்கை



மனிதன் தன் சிருஷ்டிகருடன் தனித்துவமான உறவைக் கொண்டுள்ளான்.


மனிதன் விலங்குகளிடமிருந்து வேறுபட்டவன். இவன் தேவனை அறிந்துகொள்ளவும், அவரை ஆராதிக்கவும், அவருக்குச் சேவை செய்யவும், அவர் சொல்கிறபடி கேட்டு நடக்கவும்படியாக ஆவிக்குரிய வாழ்க்கையைப் பெற்றிருக்கிறான்.

இத்தகைய திறமையானது மனிதனை மற்ற அனைத்துப் படைப்புகளினின்றும் வேறுபடுத்திக் காண்பிக்கிறது.

மனிதன் தேவனைத் தேடும் திறன் உள்ளவன்

தேவன் மனிதனுக்கு ஜீவ சுவாசத்தை ஊதினதால் அவன் அவரோடு ஓர் உள்ளார்ந்த உறவைப் பெற்றிருக்கிறான். மேலும் மனிதன் தேவ கட்டளையை நிறைவேற்றுகிற திறனையும் பெற்றிருக்கிறான்.

ஆகவேதான், மனிதர்கள் தேவனிடம் மட்டுமே உண்மையாய் கிடைக்கக்கூடிய வாழ்க்கையின் பொருள், அதன் நோக்கம், மற்றும் ஆன்மீக நிறைவைத் தேடுகிறார்கள். மனிதன் ஆன்மீகத் தேடல் உள்ளவனாக இருக்கிறான்.



ஏதேன் தோட்டம்

மனிதன் வாழ்வதற்கான ஒரு நிறைவான வாழ்விடம்

ஆதியாகமம் 2:8

"தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்."

ஏதேன், மனிதர் வாசம்செய்வதற்காகப் படைக்கப்பட்ட ஓர் அழகிய தோட்டம்.



தோட்டத்தில் இருந்த சகலவித விருட்சங்களும் பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமானதாயும் இருந்தன (ஆதியாகமம் 2:8).

உயிர் வாழ்வதற்குத் தேவையான அனைத்தையும் தேவன் இத்தோட்டத்தில் வைத்திருந்தார்.



இரண்டு
தனித்தன்மையுள்ள மரங்கள்



ஜீவவிருட்சம்
இது நித்திய ஜீவனை
வழங்குவதற்காக படைக்கப்பட்டது



நன்மை தீமை அறியத்தக்க விருட்சம்
இது மனிதனுக்கு
விலக்கப்பட்ட விருட்சம்.
மனிதனின் கீழ்படிதலைச்
சோதிப்பதற்காக
அங்கே வைக்கப்பட்டிருந்தது.

மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட முதல் பொறுப்பு

தோட்டத்தை பண்படுத்துவதும் காப்பதுவும்

ஆதியாகமம் 2:15

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்."

மனிதன் **வெறுமனே ஒரு தோட்டக்காரன் அல்ல**

மனிதன் **பிற சிருஷ்டிப்புகளை ஆளுகை செய்யும் அதிகாரம்** பெற்றிருந்தான்

மனிதனுடைய கட்டளைகளுக்கு சிருஷ்டிப்புகள் கீழ்ப்படிந்தன

மனிதன் பூமியைப் பண்படுத்தி,
அதைக் காத்து, அதை முன்னேற்றமடையச் செய்து
அதை **ஆளுகை செய்ய வேண்டியிருந்தது.**

தேவனின் முதல் கட்டளையும் மனிதனின் சுயவிருப்பமும்

ஆதியாகமம் 2:16-17

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம் அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்."



டாக்டர் வென்னோன் மெக்கி கூறுகிறார்:

"மனிதன் சோதனையின் வழியாகக் கடந்து சென்று தன்னை நிரூபிக்க வேண்டிய தகுதிகாண் பருவத்தில் இருக்கிறான். மனிதனுக்கு எதையும் செய்வதற்கு சுயவிருப்பம் அல்லது சுதந்திரம் உள்ளது என்பதை நாம் அறிவோம். சிலாக்கியங்களும் பொறுப்புகளும் பிரிக்க முடியாதவை. இது எக்காலத்திலும் மாறாத உண்மையாக இருக்கிறது. சுதந்திரமும் சுயவிருப்பமும் உள்ள ஒரு நபர் தேவனுக்குக் கீழ்ப்படிகிறாரா இல்லையா என்பதைத் தீர்மானிக்க ஒரு சோதனையை (தேர்வை) எதிர்கொள்ள வேண்டியது கட்டாயமாக இருக்கிறது."

மனிதனின் தகுதிகாண் பருவம்


தெரிந்தெடுப்புகள் பொறுப்புகளை உருவாக்குகின்றன - ஆதாமுக்கு சுயவிருப்பமும் பதில் சொல்லும் பொறுப்பு இருந்தது. சுயவிருப்பத்தை அவன் நிறைவேற்ற வேண்டிய நம்பகத்தன்மையும் தேவனுக்கு கணக்கு ஒப்புவித்தலும் இருந்தது.

மரணம் = பிரிவு அல்லது பிரிந்து செல்லுதல்

ஆவிக்குரிய மரணம் (உடனடியாக நிறைவேறியது)
ஆதாம் பாவம் செய்த அந்தக் கணப்பொழுதிலேயே அவன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டுவிட்டான்..



சரீர மரணம் (காலப்போக்கில் நடைபெற்றது)
ஆதாம் 900+ ஆண்டுகள் வாழ்ந்தான், எனினும் இறுதியில் அவன் மரித்தான்.



பெண்ணைச் சிருஷ்டித்தல்

ஓர் ஏற்ற துணை



ஆதியாகமம் 2:18

"பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்."

ஏன் ஆதாம் மட்டுமே முதலாவது உருவாக்கப்பட்டான்?



தனக்கு ஓர் ஏற்ற துணை அவசியம்
என்பதை அவன் உணருவதற்காக

ஆதியாகமம் 2:21-22

"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான் அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்."

ஏவாள் படைக்கப்பட்டதன் முக்கியத்துவம்

ஏவாள் ஆதாமின் **விலாவிலிருந்து** உருவாக்கப்பட்டாள். மனிதனை ஆளுகை செய்யும்படி அவனுடைய **தலையிலிருந்து** அவள் எடுக்கப்படவில்லை. மேலும், மனிதனுக்கு அடிமையாக இருக்கும்படி அவனுடைய **பாதத்திலிருந்தும்** அவள் எடுக்கப்படவில்லை.

ஏவாள் ஆதாமுக்கு **ஏற்ற துணையாகவும்** அவனை **நிறைவாக்கும்படியாகவும் உருவாக்கப்பட்டாள்**

முதல் திருமணம்
இல்லற வாழ்வுக்கான தேவதிட்டம்


ஆதியாகமம் 2:23-24
"அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள் இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான் அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்."

திருமணத்தைக் குறித்த தேவதிட்டம்

கணவன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்.

கணவனும் மனைவியும் உணர்வு ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும், சரீரப்பிரகாரமாகவும் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்.

திருமணம் தேவனால் நிறுவப்பட்டதால் அது பரிசுத்தமானது



வீழ்ச்சிக்கு முன்
மனிதனின் பாவமற்ற தன்மை

ஆதியாகமம் 2:25
"ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள்."

இருவரும் வெட்கப்படாதிருந்தார்கள் என்பதன் பொருள் என்ன?

இருவரும் தேவனுடைய மகிமையால் மூடப்பட்டிருந்தார்கள்
இருவரிடத்திலும் பாவம் இல்லாததால் வெட்கமும் குற்றவுணர்ச்சியும் இல்லாதிருந்தார்கள்.
இவர்களுடைய பாவமற்ற தன்மையை பாவம் செய்ததால் விரைவாகவே இழந்துவிட்டார்கள் (ஆதியாகமம் 3 அதிகாரம்).

சிந்தித்தலும் செயல்படுத்துதலும்

1. சிந்தித்தல்

தேவன் உங்களுக்கு ஜீவ சுவாசத்தை ஊதி, பிற சிருஷ்டிப்புகளிலிருந்து உங்களை முற்றிலும் வேறுபட்டவர்களாக ஆக்கியிருக்கிறார் என்னும் சத்தியமானது, உங்களது வாழ்க்கைக்கான தெரிந்தெடுப்புகள், அன்றாடம் நீங்கள் எடுக்கும் முடிவுகள், திட்டமிடல்கள் போன்ற காரியங்களில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

- உங்கள் சிருஷ்டிகரை **நீங்கள் அறிந்து கொள்ளவும், அவருடன் உறவை வளர்த்துக்கொள்ளவும்** வேண்டும் என்று நீங்கள் மனபூர்வமாக விரும்புகிறீர்களா?
- **தேவனுடன் ஐக்கியமாயிருப்பதற்காகவே** நீங்கள் சிருஷ்டிக்கப்பட்டீர்கள் என்னும் சத்தியத்தைப் புரிந்துகொள்வது **உங்கள் வேலையிலும், மனிதரோடுள்ள உறவுகளிலும், உங்களது தனிப்பட்ட இலட்சியங்களை அடையும் விதத்திலும் எவ்வாறு மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது?**
  உங்கள் வாழ்க்கையின் எந்தெந்த பகுதிகளில் **தேவனுடைய இறையாண்மை அதிகாரத்துக்கு ஒப்புவிப்பதற்காகப்** போராடிக்கொண்டிருக்கிறீர்கள்?
- உங்களுடைய வாழ்க்கை, நோக்கம் மற்றும் நித்திய இலக்கு ஆகியவை தேவனுடனான உறவுடன் இணைக்கப்பட்டுள்ளதால் நீங்கள் எந்த வகையில் **தேவனுக்கு உண்மையிலே கணக்கு ஒப்புவிக்கிறவர்களாக** மாற முடியும்?



"அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" (அப்போஸ்தலர் 17:28).

நடைமுறைப்படுத்துவதற்கான சவால்கள்

இந்த வாரத்தில், உங்களது **முன்னுரிமைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் தீர்மானங்கள்** போன்றவற்றை மதிப்பிடுவதற்கு நேரம் ஒதுக்குங்கள். அவை உண்மையிலேயே உங்கள் சிருஷ்டிகரை மையமாகக் கொண்டவையா அல்லது அவை உங்களது சொந்த சுயசார்பை மையமாகக் கொண்டவையா என்பதை ஆராயுங்கள். உங்களது வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் **தேவனை முதன்மையான ஸ்தானத்தில்** வைப்பதற்கு நீங்கள் என்ன மாற்றங்களைச் செய்யலாம்?

2. சிந்தித்தல்:



அன்பான தேவன் (I யோவான் 4:8), மனிதனுக்குச் சுயவிருப்ப சுதந்திரத்தை அளித்துவிட்டு, அவர் நம்முடன் உண்மையான ஐக்கியம் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். இந்த அவரது விருப்பம் எதை வெளிப்படுத்திக் காண்பிக்கிறது?

தேவன் ஆதாமுக்கும், அனைத்து மனிதகுலத்துக்கும் ஏன் சுயவிருப்பமாக தேர்வு செய்யும் சுதந்திரத்தை வழங்கினார்?

- **தேவன் நமக்கு அளித்த சுயவிருப்பமானது அவர் நம்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்னும் விருப்பத்தைக் காட்டிலும், அன்பையே நிரூபிக்கிறது என்பதை எவ்வாறு கூறமுடியும்?**
- **உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற தெரிந்தெடுக்கும் உரிமையானது, தேவனை நம்பி அவருக்குக் கீழ்படிய வேண்டும் என்னும் பொறுப்பை எவ்வாறு வெளிப்படுத்துகிறது?**
- **தேவனுடைய கட்டளைகளை உங்கள் மீது திணிக்கப்பட்ட கட்டுப்பாடுகளாகப் பார்க்கிறீர்களா? அல்லது உங்கள் வாழ்க்கைக்கான பாதுகாப்பு அரண்களாகப் பார்க்கிறீர்களா?** (ரோமர் 13:10 - "நீங்கள் அன்பாயிருந்தால் உங்களது அண்டை வீட்டாருக்குத் தீங்கு செய்யமாட்டீர்கள். எனவே அன்பானது நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது".



"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவான் 14:15).

நடைமுறைப்படுத்துவதற்கான சவால்கள்

கீழ்ப்படிய வேண்டுமா அல்லது கீழ்ப்படிய வேண்டாமா என்னும் இரு தீர்மானங்களுக்கு இடையே நீங்கள் சிக்கித் தவித்த நேரங்களை நினைத்துப் பாருங்கள். இந்தப் போராட்டம் தேவனுடனான உங்களுடைய உறவை எவ்வாறு பாதித்தது? இந்த வாரத்தில், தேவனுக்கு மனபூர்வமாகக் கீழ்ப்படிவதன் மூலமாக அவர்மீது நான் கொண்டிருக்கிற **அன்பையும் நம்பிக்கையையும் நிரூபிக்கப்போகிறேன்** என்று தீர்மானம் செய்யுங்கள். மேலும் அவருடைய கட்டளைகள் யாவும் அவர் நம்மீது கொண்டிருக்கிற அன்பு மற்றும் அக்கறையின் வெளிப்பாடே என்பதையும் புரிந்துகொள்ளுங்கள்.

3. சிந்தித்தல்:

பாவத்தின் காரணத்தால் வழிவமைக்கப்பட்டுள்ள இந்த உலகத்துக்குள் திருமணம், குடும்பம் போன்ற உறவுகளைக் குறித்த தேவனுடைய வழிவமைப்பு தவறாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிற இந்த உலகில், அவற்றைக் குறித்த தேவனுடைய நோக்கத்தைப் புரிந்துகொள்வது, வேதாகமம் சார்ந்த உறவுகளை மீட்டெடுக்க எவ்வாறு உதவுகிறது?

ஆதியாகமம் 2:24
"இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான் அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்."

கீழ்க்காணும் காரியங்களைக் கவனித்தில் கொள்ளுங்கள்
தேவன் ஆதாமையும் ஏவாளையும் சமமான இணையாகவும், சமமான திறமையானவர்களாகவும், ஒருவருக்கொருவர் இணக்கமான கூட்டாளிகளாகவும் படைத்திருக்கிறார். ஆண் பெண் உறவைக் குறித்து இந்தச் சமுதாயம் கொண்டிருக்கிற பார்வைக்கு இது எவ்வாறு சவாலாக விளங்குகிறது?

- **பாவம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவைச் சிதைத்துவிட்டது.** இதன் விளைவாக ஆணாதிக்க மனோபாவமும், ஆண்-பெண் சமத்துவத்திற்கான போராட்டமும் ஏற்பட்டுள்ளது. திருமண உறவிலும் குடும்ப உறவிலும் இழந்துபோன இந்த சமநிலையை கிறிஸ்து எவ்வாறு மீட்டெடுத்தார்? (காண்க: எபேசியர் 5:22-33)
- **திருமண உறவு தேவனால் நிறுவப்பட்டது, மேலும் இது பரிசுத்தமானது.** நீங்கள் திருமணம் ஆனவர்களாக இருந்தாலும், திருமணம் ஆகப்போகிறவர்களாக இருந்தாலும், கிறிஸ்துவின் தலைமையின் கீழ் ஒருமனம், அன்பு, பரஸ்பர கீழ்ப்படிதல் ஆகியவற்றைச் நடைமுறைப்படுத்தி, திருமணத்தைக் குறித்த தேவனுடைய ஆதி நோக்கத்தை எவ்வாறு சீரமைத்துக்கொள்வீர்கள்?

- **திருமணமும் தேவனுக்கு கணக்கு ஒப்புவித்தலும்:** ஒரு ஆணும் பெண்ணும் தங்கள் பெற்றோரின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியே வந்து, கணவன்-மனைவியாக தேவனுடைய அதிகாரத்துக்குள் வரவேண்டும் என்பதே அவருடைய திட்டம். தேவனுடைய இறையாண்மையின்கீழ் இருவரும் தம்பதிகளாக வாழ்க்கையை அனுபவிக்கும்படியான வாய்ப்பை இது வழங்குகிறது.?
- **ஆதாமும் ஏவாளும் நிர்வாணிகளாக இருந்தும் வெட்கப்படாமலிருந்தனர்.** மனிதகுலத்திடம் இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்த ஆவிக்குரிய, உணர்வுபூர்வமான, சரீரப்பிரகாரமான பரிசுத்தம் பற்றிய காரியங்கள் நமக்கு எதைக் கற்றுக்கொடுக்கின்றன. இது தேவனுடைய எத்தகைய தன்மையை நமக்கு வெளிப்படுத்துகிறது?

நடைமுறைப்படுத்துவதற்கான சவால்கள்

இந்த வாரத்தில் **I கொரிந்தியர் II –ஆம் அதிகாரம் மற்றும் எபேசியர் 5 –ஆம்** அதிகாரத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் திருமணமானவராக இருந்தால், **கிறிஸ்துவின் அன்பையும் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படிதலையும்** வேதவசனம் போதிக்கிறபடி எவ்வாறு மாதிரியாக வாழ்ந்துகாட்டுவது என்பதைக் குறித்து உங்கள் துணையுடன் கலந்துரையாடுங்கள். மேலும் நீங்கள் திருமணமானவர்களாக இருப்பீர்களென்றால் **குடும்ப உறவுகள் பற்றிய தேவனுடைய திட்டத்தை** எவ்வாறு நிறைவேற்ற முடியும் என்று உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள்.

4. பயின்றதைப் பகிர்ந்துகொள்ளுதல்:

ஆதியாகமம் 2 –ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள சிருஷ்டிப்பு, மனிதனைப் படைப்பதில் தேவன் காட்டிய தனிப்பட்ட ஈடுபாடு, அவனுக்காக ஏற்படுத்திய வாழ்க்கை துணை, குடும்ப வாழ்க்கையைப் பற்றிய அவரது நோக்கம், இல்லற வாழ்வின் கட்டமைப்பு போன்ற சத்தியங்களைப் பயன்படுத்தி எவ்வாறு சுவிசேஷத்தை பகிர்ந்துகொள்ள முடியும்? அவ்வாறே சிருஷ்டிகரின் உறவுக்குள் ஒருவரை எவ்வாறு கொண்டுவருவீர்கள்?

உங்கள் வாழ்க்கையில் அனுபவமாக்குதல்

தேவனுடைய அறிவாற்றலை எனது வாழ்க்கையில் ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

டாக்டர் வெர்னோன் மெக்கியின் மேற்கோள்கள்:



“குடும்பத்தில் ஆண் தலைமை தாங்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். எனவே அவர் முதலாவதாக அவனைப் படைத்தார். மேலும் பெண் ஆணைப் பின்பற்றிச் செல்லவேண்டும என்று படைத்தார். ஆணே காரியங்களை முன்னின்று நடத்தும் தலைவன், இதற்கு ஏற்றாற்போலவே தேவன் அவனுடைய உடலமைப்பை உருவாக்கியிருக்கிறார், பெண் அவனுடைய தலைமைத்துவத்தை ஏற்று நடக்கப் பொறுப்பாவாள்.

ஒரு மனைவி தன் கணவனை நேசிக்க வேண்டும் என்று சொல்லாதீர்கள். தேவன் அவ்வாறு சொல்லவில்லை. அவள் அவனுக்குப் பொறுப்பாளியாக இசைந்து செல்ல வேண்டும் என்றே சொல்லியிருக்கிறார். கணவன் மனைவியிடம், “நான் உன்னை நேசிக்கிறேன்” என்று சொன்னால், அவளும், அவனிடம், “நான் உன்னை நேசிக்கிறேன்” என்று சொல்லுகிறவளாயிருக்கிறாள்.”


ஆதியாகமம்
3:1 - 13

உங்கள் படிப்பிற்கான திட்டமிடல்

வேத பகுதி: ஆதியாகமம் 3:1-13
வேத வாசிப்பு நேரம்: 30-35 நிமிடங்கள்



ஜெபம்

படிக்கத் தொடங்குவதற்குமுன், தேவனுடைய தெய்வீக திட்டத்தைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக நமது இருதயங்களையும் எண்ணங்களையும் காதுகளையும் கண்களையும் வழிநடத்தும்படி ஒரு நிமிடம் ஜெபம் செய்யுங்கள்.

சிந்தனைக்குரிய வேத வசனம்



"அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்"

ஆதியாகமம் 3:6



வேதாகமத்திலேயே

ஆதியாகமம் 3ஆம் அதிகாரம்

ஏன் **முக்கியமானதாகக் கருதப்படுகிறது?**

நீங்கள் வேதாகமத்தை





ஆதியாகமம் 1 மற்றும் 2

ஆதியாகமம் 3ஆம் அதிகாரத்தை கடந்து

ஆதியாகமம் 4வது அதிகாரத்துக்கு வரும்போது,


தேவனுக்கும் மனிதனுக்கும்
இடையே என்ன நிகழ்ந்தது?
இத்தகைய பாவங்கள் அனைத்தும்
எங்கிருந்து வந்தன என்பதைக்
குறித்து ஆச்சரியப்படுவீர்கள்?

ஆதியாகமம் 3ஆம் அதிகாரம், இவை எல்லாவற்றிற்கும் காரணமான பாவம் **எப்படி, என்ன, எங்கு ஏன் உருவானது** என்பதற்கான விளக்கத்தை தருகிறது.

தேவனுடைய தெய்வீக நல்லாட்சியில் மனிதன் பொறுப்புடைய படைப்பாக சிருஷ்டிக்கப்பட்டான்.


- மனிதன் தன் தேவனுடைய சன்மார்க்க பண்பைப் பிரதிபலிக்க வேண்டும்
- மனிதன் தன் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்
- மனிதன் தன் தேவனுக்குச் சேவை செய்ய வேண்டும்
- மனிதன் தேவனுடைய அரசாங்கத்தின் சட்டத்திற்குத் தம்மைச் சமர்ப்பித்து நடக்க வேண்டும்

ஆதாம் ஏவாளுக்கு
தேவன் கொடுத்த தெளிவான கட்டளை



மரணம் என்பதற்கு
தேவனைவிட்டுப் பிரிக்கப்படுதல்
என்று பொருள்

மனிதன் மூன்று அம்சங்கள் உள்ளவன்



சரீரம்
(கண்ணுக்குத் தெரிகிற உருவம்)
இது வெளிப்பிரகாரமான அம்சம்

ஆத்துமா
(சிந்தை, சித்தம், உணர்வு)
இது உள்ளான அம்சம்

ஆவி
(தேவனுடன் தொடர்புகொள்ளக்கூடியது)
இது மிகவும் உள்ளான அம்சம்

மூன்று மரணங்கள்

முதல் மரணம்
ஆவிக்குரிய மரணம் (எபேசியர் 2:1)
ஆவி தேவனுடைய உறவை விட்டுப் பிரிவது

இரண்டாம் மரணம்
சரீர மரணம் (பிரசங்கி 12:7)
சரீரம் ஆத்துமாவையும் ஆவியையும் விட்டுப் பிரிவது

மூன்றாம் மரணம்
நித்திய மரணம் (வெளி. 20:11-15)
ஆத்துமா நரகத்தில் என்றென்றுமாகத் தள்ளப்படுவது

ஏன் பாவசோதனை ஏற்பட்டது?



மனிதன் கள்ளங்கபடம் இல்லாதவனாக சிருஷ்டிக்கப்பட்டான்
(ஆதியாகமம் 1, 2 அதிகாரம்)

ஒரு குணாதிசயம் சோதனையின் ஊடாகச் செல்லும்போதுதான்
அந்தக் குணாதிசயத்தில் வளர்ச்சி உண்டாகிறது.

சோதனை உங்கள்
குணாதிசயத்தை வளர்த்தால்

நீதிமானாக விளங்கப்படும்


சோதனை உங்கள்
குணாதிசயத்தை அழித்தால்

ஒருமனிதன் கீழ்ப்படியாதற்போனதினாலே
எல்லாரும் பாவத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள்

"அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர்
பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர்
நீதிமான்களாக்கப்படுவார்கள்" (ரோமர் 5:19).

சாத்தான் மனிதனுக்குச் சோதனை என்னும் கண்ணியை விரித்தான்

சாத்தான் என்பவன் யார்?



அவன் ஆதியிலே எப்படிப்பட்ட மேன்மையுள்ளவனாய் இருந்தான் என்பதையும், அவன் எவ்வாறு வீழ்ச்சியுற்று சாத்தானாக மாறினான் என்பதையும் ஏசாயா 14, எசேக்கியேல் 28 ஆகிய அதிகாரங்கள் விவரிக்கின்றன.


சாத்தான் எவ்வாறு ஏதேன் தோட்டத்துக்குள் நுழைந்தான்?

சாத்தான் இதற்காக சர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டான்

இன்றைய காலத்தில், சாத்தான் ஒளியின் தூதனுடைய வேடத்தை அணிந்தும் வருவான் என்பதைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருப்போமாக (2 கொரிந்தியர் 11:14).



ஏன் சர்ப்பம் ஆதாமை அணுகுவதற்குப் பதிலாக ஏவாளை அணுகியது?



தேவனுடைய வார்த்தையில் அன்புகூருவதிலும், அவருடைய நன்மைகளிலும் சந்தேகத்தை உண்டாக்குவான்

தேவன் நல்லவராக இருந்தால் இத்தகைய கட்டுப்பாடுகளை அவர் ஏன் விதிக்க வேண்டும் என்னும் சந்தேகத்தை உருவாக்குவான்.

சாத்தான் தேவனுடைய வார்த்தையை மறுதலிப்பான்

சாத்தான் ஏவாளிடம் கூறும்போது, தேவன் நீதிபரர் அல்ல என்று மறைமுகமாக உணர்த்தினான்.



டாக்டர் வெர்னோன் மெக்கி கூறுகிறார்:


> "விசுவாசத்தினால் கீழ்ப்படிதல் வரும்" என்னும் சத்தியத்தை ரோமர் புத்தகம் நமக்குக் கற்பிக்கிறது. விசுவாசம் கீழ்ப்படிதலுக்கு வழிவகுக்கிறது, அவிசுவாசமோ கீழ்ப்படியாமைக்கு வழிவகுக்கிறது. மேலும் சந்தேகம் எப்போதும் கீழ்ப்படியாமைக்கு நேராகவே வழிநடத்துகிறது.

மனிதகுல கூட்டமைப்பின் முதல் தலைவனான ஆதாமும் அவனுடைய மனைவி ஏவாளும்

தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமற்போனது (ஆதியாகமம் 3:6)

சாத்தான் ஸ்திரீயிட வேண்டுகோள் வைக்கிறான்

மாம்சத்துக்கடுத்த வேண்டுகோள்
"அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லது"



மனிதனுடைய உளவியல் ரீதியிலான வேண்டுகோள்
"பார்வைக்கு இன்பமானது"



மனிதனின் இறைநம்பிக்கை சார்ந்த வேண்டுகோள்
"புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கது"
"தேவனோடு போட்டியிட என்னால் முடியும்"



ஆதியாகமம் 3:6
"அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள் அவனும் புசித்தான்"

தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமற்போனதினால் ஏற்பட்ட பின்விளைவுகள்

(அவருடைய சட்டத்திற்கும் அவருடைய ஆளுகைக்கும்)



ஆதாமும் ஏவாளும்

கண்கள் திறக்கப்பட்டன

இது நமது **மனசாட்சியைக்** குறிக்கிறது

வீழ்ச்சிக்கு முன் மனிதன்

கள்ளங்கபடற்றவனாயிருந்தான்

வீழ்ச்சிக்குப் பின்,

பாவம் செய்துவிட்டோம்

என்று அவர்களுடைய மனசாட்சி குற்றப்படுத்தியது

மனசாட்சி

தேவனுடைய சாட்சியாக இருக்கிறது

இது குற்றமனசாட்சியைத் தூண்டுகிறது

குற்ற உணர்வு

தேவனுக்கு முன்பாக ஒரு மனிதன் குற்றவாளி

என்பதை நினைவூட்டுகிறது

ஆதாமும் ஏவாளும்
தங்கள் நிர்வாணத்தை மறைக்க முயலுதல்

அவர்கள் அத்தி இலைகளைப் பயன்படுத்தி தங்கள் நிர்வாணத்தை மறைக்க முயன்றார்கள். **ஆனால் அது அவர்களுடைய பாவத்தையோ அவமானத்தையோ மறைக்க முழுயவில்லை.**

ஆதாமும் ஏவாளும் தேவனுடைய பார்வையிலிருந்து ஒளிந்துகொள்வதன் வாயிலாக தங்கள் பாவத்தை மறைக்க முயன்றார்கள். **அவர்கள் தங்கள் பாவம் செய்ததை ஒத்துக்கொள்ளவும் அறிக்கையிடவும் ஆயத்தமாயில்லை.**



ஆதாமும் ஏவாளும்
தேவனுடைய பிரசன்னத்திலிருந்து ஒளிந்துகொள்ளுதல்

ஆதியாகமம் 3:8-9

"பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்."

பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரித்துவிடும் (ஆவிக்குரிய மரணம்)
ஆதாமும் ஏவாளும் இழந்துபோன நிலைக்கு ஆளாகினர்



டாக்டர் வெர்னோன் மெக்கி கூறுகிறார்:


"தேவனாகிய கர்த்தர் மனிதனை நோக்கி, "ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்" என்றார். ஏனெனில் ஆதாம் இழந்துபோனவனாகிவிட்டான். அவனைத் தேடி தேவன் வந்தார். ஆதாம் ஒருபோதும் தேவனைத் தேடி வரவில்லை."

மாறி மாறி குற்றஞ்சாட்டுதல் என்னும் விளையாட்டு (ஒருவரிடமிருந்து மற்றவருக்குக் கடத்துவது)

ஆதியாகமம் 3:10-12

பாவத்தின் பின்விளைவு

மனித குலத்திலுள்ள ஒவ்வொருவர்மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது



சிந்தித்தலும் செயல்படுத்துதலும்

1. சிந்தித்தல்

ரோமர் 13:8-10 வசனங்களை வாசியுங்கள்: **தேவன் ஏன் ஆதாமுக்கும் நமக்கும் கட்டளைகளைக் கொடுத்தார் என்பதைக் கண்டறியுங்கள்.** மேலும் இந்த வேதபகுதி தேவனுடைய இருதயத்தைப் பற்றியும் அவருடைய பண்புகளைப் பற்றியும் நமக்கு என்ன கற்றுத் தருகிறது என்பதையும் சிந்தியுங்கள் (ஆபகூக் 1:13, தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக்கொண்டிருக்கமாட்டீரே).

செயல்படுத்துதல்

தேவன் யார்? அவர் ஏன் மனிதனுக்கு கட்டளை கொடுத்தார்? அவர் கொடுத்த கட்டளைகள் நமக்கு எளிதாக இருக்கும்படி எவ்வாறு ஒன்றிணைத்து ஒரே கட்டளையாக்கினார்? இந்தக் கட்டளைகள் நீங்கள் அவரில் அன்புகூரவும், அவருக்காக வாழவும் எவ்வாறு உங்களை உற்சாகப்படுத்துகிறது? எவ்வாறு தூண்டுதல் செய்கிறது?

தேவன், கிறிஸ்துவுக்குள் நம்மை புது சிருஷ்டியாக மாற்றி (2 கொரிந்தியர் 5:17), நமக்குத் தேவையான எல்லாவற்றையும் தாராளமாகக் கொடுத்ததற்காக (1 கொரிந்தியர் 1:30) நாம் எவ்வாறு அவருக்கு நமது நன்றியைத் தெரிவிக்க முடியும்?



டாக்டர் வெர்னோன் மெக்கியின் சிந்தனைகள்:

> “மனிதன் பொறுப்பான ஓர் உயிர் உருவாகப் படைக்கப்பட்டிருக்கிறான். அவன் தேவனை மகிமைப்படுத்தி, அவருக்குக் கீழ்ப்படிந்து, சேவை செய்வதன் வாயிலாகவும், அவருடைய தெய்வீக அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிவதன் வாயிலாகவும் தனது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியவனாக இருக்கிறான்”

2. சிந்தித்தல்

- **தேவனுடைய இறையாண்மையின் அதிகாரத்திற்கு** உட்பட்டு உங்களது பொறுப்பை நிறைவேற்ற எவ்வாறு தொடர்ந்து கவனமாயிருப்பீர்கள்?
- தேவனுடைய குணாதிசயத்துடன் ஒத்துப்போகிற காரியங்களை “தெரிந்தெடுக்கும் பொறுப்பு” என்றால் என்ன?
- உங்கள் வாழ்க்கையில் ஒரு நேர்மையான தீர்மானத்தை எடுத்த தருணத்தை நினைத்துப்பாருங்கள். அந்த தீர்மானத்தின் பின்விளைவுகள் எப்படி ஆலோசித்தீர்கள் என்பதை தேவனுடனான உங்கள் உறவின் அடிப்படையில் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

செயல்படுத்துதல்

- நீங்கள் அன்றாடம் எடுக்கும் தீர்மானிங்கள் தேவனுடைய அதிகாரம், அவருடைய விருப்பம் மற்றும் குணாதிசயத்துடன் இசைந்து போகிறதா என்பதை எவ்வாறு உறுதி செய்கிறீர்கள்?
- நீங்கள் சமீப காலத்தில் எடுத்த தீர்மானங்களையும் செயல்களையும் ஆராய்ந்து பாருங்கள். இவை தேவனோடும் பிறரோடும் உங்களுக்கு இருக்கிற உறவில் தீங்குவிளைவிப்பதைத் தவிர்ப்பதற்காக என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டிய தேவைகள் உங்களுக்கு இருந்தது?
- தீர்மானங்களை எடுப்பதற்கு முன் தேவனுடைய வழிகாட்டுதலைத் தேடும் பழக்கத்தை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம்?

3. சிந்தித்தல்

வீழ்ந்துபோன பாவத்தின் பாவசுபாவத்தின் தன்மையால் நாம் சுதந்தரித்துக்கொண்டிருக்கும் **"பாவ சுழற்சியை"** கண்டுகொண்ட நிலைமையில் உங்களுக்குள்ளாக இருக்கும் பாவ சுபாவத்தின் தாக்கம் எப்படிப்பட்டது என்பதை சிந்தனை செய்யுங்கள்.

"மனசாட்சி" தேவனுடைய நமக்குள் ஏற்படுத்தியிருக்கும் அவருடைய சாட்சி. இது **குற்றவுணர்வையும், அவமானத்தையும், பயத்தையும், ஒளிந்துகொள்ளவும், பிறர்மீது பழிபோடவும் துண்டுதல்** செய்கிறது என்பதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

செயல்படுத்துதல்

"பாவத்தின் சுழற்சி" நமது குணாதிசயத்தை எவ்வாறு அழிக்கிறது என்பதை அமைடயாளம் கண்டு, **இதை வெற்றிகொள்ள கிறிஸ்து நமக்காக எவ்வாறு உதவி செய்துள்ளார்** என்பதையும் சிந்தித்து, அதை உங்கள் வாழ்க்கையில் செயல்படுத்தவும் (வாசிக்க: 2 கொரிந்தியர் 5:21; ரோமர் 8; 1 யோவான் 1:5-10).

ஆதாம் ஏவாளுக்கு ஏற்பட்ட சோதனையின்போது, சாத்தான் மனிதனின் ஆத்துமாவுக்கும் தேவனுக்கும் இடையில் நுழைய விரும்பினான். இதன் மூலம் தேவனுக்கும் மனிதனுக்குமான உறவை அழித்து, அவனை வென்று, மனிதனின் தேவனாக சாத்தான் மாற விரும்பினான் (எபேசியர் 2:2-3).

பிசாசு, ஆதாமையும் ஏவாளையும் எவ்விதமான தந்திரத்தினாலே சோதித்தானோ அதேவிதமாகவே நம்மையும் சோதிக்கிறான் (1 யோவான் 2:16). அவன் இயேசு கிறிஸ்துவையும் வனாந்தரத்தில் இவ்விதமாகவே சோதித்தான் (மத்தேயு 4, மாறகு 1, லூக்கா 4) என்பதையும் உணர்ந்துகொள்ளுங்கள்.

ஆதாம் ஏவாள் **ஆதி. 3**	**நீங்களும் நானும்** **1 யோவான் 2:16**	**இயேசு கிறிஸ்து** **மத்தேயு 4:1–11 மற்றும்** **லூக்கா 4:1–13**
"இந்த விருட்சம் புசிப்புக்கு நல்லது" மாம்சத்தில் இச்சையை உண்டுபண்ணுதல் (சரீரத் தேவைகளை முன்னிட்டு சோதனை)	**"இவைகள் உலகத்தினாலுண்டானவைகள்"** **"மாம்சத்தின் இச்சை"**	"இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி செய்யும்" மாம்சத்தில் இச்சையை ஏற்படுத்துதல் (சரீரத் தேவைகளுக்காக சோதனை)
"பார்வைக்கு இன்பமானது" மனிதனின் சிந்தனையில் இச்சையை உண்டுபண்ணுதல் (உணர்ச்சிகளைத் தூண்டி சோதித்தல்)	**"கண்களின் இச்சை"**	"பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்தான்" சிந்தையில் ஏற்படுத்தும் இச்சை
"புத்தியைத் தெளிவிக்கிறது" மனிதனின் ஆன்மீக காரியத்தில் இச்சையை உண்டாக்குதல்	**"ஜீவனத்தின் பெருமை"** **இது மனிதன் ஆன்மீகம் சார்ந்தது. தேவனுடன் போட்டியிடுவது**	"நீர் தேவனுடைய குமாரனேயானால், தேவாலயத்து உப்பரிகையின்மேலிருந்து தாழக்குதியும்" ஆன்மீகக் காரியத்தில் இச்சையை உண்டாக்குதல் (ஆவிக்குரிய பெருமையை உண்டாக்கும்படியான சோதனை)

செயல்படுத்துதல்

சாத்தான் தனது தந்திரங்களால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஜெயிக்க முடியவில்லை. அவர் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, சாத்தானைத் தோற்கடிக்க வேதவசனங்களைப் பயன்படுத்தினார்.

பரிசுத்த ஆவியின் வல்லமையால் வேதவாக்கியங்களைப் பயன்படுத்தி, நீங்கள் எதிர்கொள்கிற மாம்சத்தின் இச்சை, கண்கள் இச்சை, ஜீவனத்தின் பெருமையை எவ்வாறு வெற்றிபெறுவீர்கள் என்பதை எழுதுங்கள்.



டாக்டர் வெர்னோன் மெக்கி சொல்கிறார்:

“சோதனையின் வழியாக நாம் செல்லும்போதே நமது சிறந்த குணாதிசயங்கள் வளர்ச்சியடையும்”

செயல்படுத்துதல்

உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றால் நீங்கள் சோதிக்கப்படும்போது, உங்களுக்குள் வாசமாயிருக்கிற கிறிஸ்து அதற்குப் பதிலீடு செய்யவும் தமது குணாதிசயத்தை உங்களில் வளரச் செய்யவும் நீங்கள் எவ்வாறு அவருக்கு இடம் கொடுப்பீர்கள்?

4. பயின்றதைப் பகிர்ந்துகொள்ளுதல்:

ஆதியாகமம் 2ஆம் அதிகாரத்திலுள்ள சத்தியங்களை நீங்கள் எவ்வாறு பயன்படுத்தலாம்? தேவனுடைய சிருஷ்டிப்பு, மனிதனுடைய உண்டுபண்ணுவதில் அவரது தனிப்பட்ட பங்களிப்பு, அவரது கொடைகள், நோக்கம், உறவுகளின் வடிவமைப்பு ஆகியவற்றின் மூலமாக சுவிசேஷத்தை விளக்குவதும், யாராது ஒருவரை தன் சிருஷ்டிகரோடுள்ள உறவுக்குள் வரவும் அழைப்பதுமாகும்.

உங்கள் வாழ்க்கையில் அனுபவமாக்குதல்

தேவனுடைய அறிவாற்றலை எனது வாழ்க்கையில் ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

டாக்டர் வெர்னோன் மெக்கியின் மேற்கோள்கள்:



“இந்தப் பாவச் சோதனையின் வாயிலாக, மனிதனின் ஆத்துமாவுக்கும் தேவனுக்கும் இடையில் சாத்தான் வர விரும்பினான். அதாவது, தேவனிடமிருந்து மனிதனைப் பிரிக்க விரும்பினான். மேலும் மனிதனை வென்று, தானே அவனுக்குத் தேவனாக இருக்க வேண்டுமென்று அவன் விரும்பினான். இச்சோதனையில் மாம்சத்தின்படியான காரியங்களைக் காட்டிலும், ஆன்மீகக் காரியமே பிரதான இடம் பெற்றிருந்தன. இந்த நேரத்தில் மனிதன் திருடவோ, பொய் சொல்லவோ, இச்சிக்கும்படியாகவோ சோதிக்கப்படவில்லை. மாறாக, அவன் தன்னைப் படைத்த தேவனையே சந்தேகிக்கும்படியாகவே தூண்டப்பட்டான்.”


ஆதியாகமம்
3:14 - 24

உங்கள் படிப்பிற்கான திட்டமிடல்

வேத பகுதி: ஆதியாகமம் 3:14-24
வேத வாசிப்பு நேரம்: 15-30 நிமிடங்கள்



ஜெபம்

படிக்கத் தொடங்குவதற்குமுன், தேவனுடைய தெய்வீக திட்டத்தைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக நமது இருதயங்களையும் எண்ணங்களையும் காதுகளையும் கண்களையும் வழிநடத்தும்படி ஒரு நிமிடம் ஜெபம் செய்யுங்கள்.

சிந்தனைக்குரிய வேத வசனம்



"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்"


- (ஆதியாகமம் 3:15)

தேவன், சாத்தானுக்கு எதிரான தமது தீர்ப்பின்போது எவ்வாறு மேசியாவாகிய கிறிஸ்துவின் வருகையைக் குறித்து வாக்குறுதி அளித்தார்? அதுபோலவே, எவ்வாறு அவருடைய நியாயத்தீர்ப்பிலிருந்து நம்முடைய இரட்சிப்புக்கான நம்பிக்கையை அளித்தார்?

சாத்தான்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு

ஆதியாகமம் 3:15

"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்."




தேவன், மனிதனுக்கு ஒரு மாபெரும் நம்பிக்கையை அளிப்பதற்காக சாத்தானுக்கு இந்த நியாயத்தீர்ப்பை அறிவித்தார்.

முதல் தீர்க்கதரிசனம் மேசியாவாகிய கிறிஸ்துவைப் பற்றியது

முதல் சுவிசேஷம் (நற்செய்தி) - கிறிஸ்துவே உலக இரட்சகர்



சாத்தானுக்கு எதிரான இறுதி வெற்றி வரும். அதற்கு முன் **நன்மைக்கும் தீமைக்கும்** இடையே நீண்ட போராட்டம் இருக்கும்



மனித இனத்தை வென்றதன் மூலமாக தேவனையும் வென்றுவிட்டதாக சாத்தான் நினைத்தான்.

ஆனால், "உன் வித்துக்கும் (சாத்தானுக்கும்) ஸ்திரீயின் வித்துக்கும் (கிறிஸ்துவுக்கும்) இடையே பகையை ஏற்படுத்துவேன்" என்று இனிமேல் வரப்போகிற **நியாயத்தீர்ப்பை தேவன்** அறிவித்தார்.



இரு வித்துகளுக்கும்
(சந்ததிக்கும் இடையே)
ஒரு முரண்பாடு,
நீண்ட காலப் போராட்டம்
உண்டானது



கர்த்தராகிய இயேசு, தேவனுடைய பிள்ளைகளுக்கும், பிசாசின் பிள்ளைகளுக்கும் இடையே ஒரு வேறுபாட்டை உண்டாக்கினார்.

"நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்".
(யோவான் 8:44)

"இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல".
(1 யோவான் 3:10)

சாத்தானுக்கு எதிரான போரில் கிறிஸ்துவில் இறுதி வெற்றியை நாம் பெறுவோம் (வெளி. 20, 21). அதுவரையிலும் கிறிஸ்துவை விசுவாசிக்கிற அனைவரும் பரிசுத்த ஆவியின் துணையாலும், தேவனுடைய வார்த்தையின் உதவியினாலும் அவனுடைய சோதனையை எதிர்கொண்டு போரில் வெற்றி பெற வேண்டும்.

டாக்டர் வெர்னோன் மெக்கி கூறுகிறார்:

“கிறிஸ்து வருவதற்கு முன்பு, விசுவாசத்துக்குக் கீழ்ப்படிதலால் வெற்றி கிடைத்தது. கிறிஸ்து வந்த பிறகு, விசுவாசத்தின் மூலமாக நாம் கிறிஸ்துவோடு நம்மை அடையாளப்படுத்திக் கொள்கிறோம். இரட்சிக்கப்படுவது என்றால் என்ன? இரட்சிப்பு கிறிஸ்துவில் உள்ளது.”

ஆதியாகமம் 3:15
ஸ்திரீயின் வித்து - இது கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பைக் குறிக்கிறது

கவனிக்க வேண்டிய முக்கியமான கருத்து: மனிதனின் வித்து என்று தேவன் சொல்லவில்லை, “ஸ்திரீயின் வித்து” என்றே கூறினார்.

கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பிற்கான அடித்தளத்தை தேவன் ஏசாயா புத்தகத்தில் மீண்டும் அமைத்துள்ளார் (ஏசாயா 7:14).

“ஆதலால் **ஆண்டவர் தாமே** உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; **இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல்** என்று பேரிடுவாள்.”

700 ஆண்டுகளுக்குப் பின் இந்த தீர்க்கதரிசனம் வாக்குறுதி சொன்னபடியே நிறைவேறியது.
(வாசிக்க: மத்தேயு 1:18-23)



இரட்சிப்பு என்பது தேவன் மனிதனைத் தேடுவது, மனிதன் தேவனைத் தேடுவது அல்ல!

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபின், தேவனிடத்திலிருந்து ஓடி ஒளிந்தார்கள். **இவர்களைப் போலவே மனுக்குலத்தார் அனைவரும் அவ்வாறே செய்கின்றனர்.**

ஆனால் தேவனோ அவர்களைத் தேடி வந்தார்.

"ஆதாமே நீ எங்கே இருக்கிறாய் ?"

என்று அழைத்தார்.

தேவன் மனிதனைத் தேடி வந்ததாக வேதாகமம் முழுவதிலும் காண முடியும்.

(வாசிக்க: ரோமர் 3:11, யோவான் 15:16, 1 யோவான் 4:19)

தேவன் ஆண்களையும் பெண்களையும் தேடிவந்து அவர்களுக்கு கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பை அருளுகிறார்.

ஸ்திரீக்கு (ஏவாளுக்கு) வழங்கப்பட்ட தேவனுடைய நியாயத்தீர்ப்பு

ஆதியாகமம் 3:16



துக்கமும் வேதனையும் இல்லாமல் அவளால் ஒரு குழந்தையை உலகிற்குக் கொண்டுவர இயலாது.

நமக்கு ஆர்வமூட்டுகிற காரியம் என்னவெனில், **குடும்ப வாழ்க்கைக்கு மகிழ்ச்சியைத் தருவதும், மனித வாழ்க்கை தொடர்வதும் துயரம் மற்றும் வேதனையின் வழியாகவே வரவேண்டியதாயிருக்கிறது.**

மனிதனுக்கு (ஆதாமுக்கு) வழங்கப்பட்ட தேவனுடைய நியாயத்தீர்ப்பு

ஆதியாகமம் 3:17-19



"நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், **நீ பூமிக்குத் திரும்புமட்டும்** உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; **நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்** என்றார்".
(ஆதியாகமம் 3:19)

மரணம்
பாவத்தின் சம்பளம்

மரணம் என்றால் என்ன?

மரணம் என்பதற்கு பிரிவு என்று பொருள்

ஆவிக்குரிய மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிதல்



ஆதாமும் ஏவாளும் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல்போன அந்த நேரத்திலேயே அவர்களுடைய ஆவி தேவனைவிட்டுப் பிரிந்தது.

மரணம் என்பது தேவனைவிட்டுப் பிரிவது

ஆதாம் ஏவாளுக்கு பிறகு தோன்றிய **அத்தனை மனுக்குலமும்,** அதாவது பூமியில் பிறந்த ஒவ்வொரு மனிதரும் ஆவியில் மரித்த நிலையிலும், தேவனைவிட்டுப் பிரிந்த நிலையிலும் இருக்கின்றனர்.

பாவங்களினாலும் அக்கிரமங்களினாலும் நாம் மரித்தவர்களாயிருக்கிறோம் (எபேசியர் 2:1). இது ஆவிக்குரிய மரணத்தையே குறிக்கிறது.

சரீர மரணம் என்பது ஆவியும் ஆத்துமாவும் சரீரத்தைவிட்டுப் பிரிவது



ஒரு நபர் சரீர மரணம் அடையும்போது அவனிடமிருக்கிற ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் என்ன சம்பவிக்கிறது?

“இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை” (பிரசங்கி 12:7).

ஆதாம் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசித்த உடனேயே அவன் சரீரத்தில் மரணமடைய வில்லை. அதற்குப் பிறகும் அவன் 900 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்தான்.

ஆயினும் அவன் கீழ்ப்படியாமல்போன அந்த நேரத்திலேயே ஆவிக்குரிய மரணம் அடைந்தான். அதாவது தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான். ஆகவேதான் தேவனைவிட்டு ஓடிப்போனான், இலைகளைத் தைத்து தன் நிர்வாணத்தை மறைத்துக்கொண்டான்.

நித்திய மரணம் என்பது தேவனிடமிருந்து நிரந்தரமாகப் பிரிக்கப்படுவது



பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பில் இயேசு கிறிஸ்து நியாயாதிபதியாக இருப்பார். இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஒரு மனிதனின் பாவங்களுக்காக தேவன் அளித்த இரட்சிப்பை வேண்டாமென்று நிராகரிக்கிறவர்களுக்கு அவர் நியாயத்தீர்ப்பை தீர்ப்பை வழங்குவார்.

இரட்சிப்பைப் மறுத்துவிடுகிறவர்கள் அனைவரும், **"அக்கினியும் கந்தகமுமான கடலிலே** தள்ளப்பட்டு இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" (வெளி. 20:10,15).

மீட்பராகிய தேவன்
மீட்பின் சத்தியங்கள்

(காலத்தால் அழியாத சத்தியம்)

மனிதனை இரட்சிப்பதற்காக தேவன் மட்டுமே முன்முயற்சி எடுக்க முடியும்

பாவிகளுக்காக (ஆதாம், ஏவாளுக்காக) ஒரு **பதிலீடான பலிமரணத்தின்** மூலமாக தேவன் **பாவத்தின் சம்பளத்தைத் செலுத்தித் தீர்த்தார்.**

பாவம் செய்த மனுக்குலத்தை மீட்பதற்கும், பாவத்திலிருந்து அவர்களை இரட்சிப்பதற்கும், தம்மோடுள்ள உறவை மீட்டெடுப்பதற்கும், என்றென்றுமாக வேதனைப்படுகிற நித்திய மரணத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கும் தேவன்தாமே முன்வந்து காரியங்களைச் செய்தார்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார் (ஆதியாகமம் 3:21).


பாவநிவாரண பலியின் ஆரம்பம்
பாவி தண்டிக்கப்படுவதற்கு **பதிலாக**
குற்றமற்ற ஆட்டுக்குட்டி (கிறிஸ்து) பலியிடப்படுகிறது
(யோவான் 1:29)



அத்தி இலைகளிலான அரைக் கச்சைகளை அவர் நிராகரித்தார். தேவனால் ஏற்றுக்கொள்ளத்தக்க மாற்று ஆடைகளை உருவாக்கிக் கொடுத்தார். தோலினால் ஆன இந்த ஆடைக்காக விலங்குகள் கொல்லப்பட வேண்டியிருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தேவன் மனிதனிடத்தில் இரக்கத்தையும் கிருபையும் அன்பையும் காண்பிக்கிறார்.

நியாயப்பிரமாணத்தின்படி (தேவனுடைய சட்டத்தின்படி) எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; **இரத்தஞ்சிந்துதலில்லாமல் (பாவ) மன்னிப்பு உண்டாகாது** (எபிரேயர் 9:22).



இரத்தமில்லாமல் பாவமன்னிப்பு இல்லை. ஏன்?

ஏனெனில் **தேவன்** நீதியுள்ளவர், பாவத்திற்கான பலி செலுத்தப்படாமல் பாவம் மன்னிக்கப்படமாட்டாது.

"மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது" (லேவியராகமம் 17:11).
இங்கே இரத்தம் என்பது உயிரைக் குறிக்கிறது.

பலியின் இரத்தம் பழுதற்ற ஓர் ஆண் ஆட்டுக்குட்டியிடமிருந்து சிந்தப்பட வேண்டும்.



ஏன்?

ஏனெனில், பாவத்தைக் கண்டும் காணாமல் கடந்துபோகாதவரும் பரிசுத்தமும் நீதியுமுள்ளவராய் நீதி செய்கிற தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து நாம் காப்பாற்றப்படவேண்டும்.

ஏனெனில், தேவன் தம்முடைய எல்லையற்ற பரிசுத்தத்தின் தகுதிநிலைக்கு நிகரான கள்ளங்கபடற்றதும், பரிசுத்தமானதும், எவ்விதக் குறையுமற்றதாயிருக்கிற ஒரு பதிலாள் மரணத்தையே எதிர்பார்க்கிறார்.

ஏனெனில், தேவன் ஒரு பாவியை மன்னித்து, தம்மோடு ஒப்புரவாக்கி, இழந்துபோன உறவை மீட்டெடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

தேவனுடைய இத்தனை எதிர்பார்ப்புகளும் மற்றொருவருடைய உயிர் விலைக்கிரயமாகக் கொடுக்கப்படுவதன் மூலமாகவே சாத்தியமாகும்.

டாக்டர் வெர்னோன் மெக்கி சொல்கிறார்:

“ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேறியபோது, அவர்கள் தங்களுக்காக அடிக்கப்பட்ட மிருகத்தின் இரத்த பலியைத் திரும்பிப் பார்த்தார்கள். **மகா பரிசுத்த ஸ்தலத்தில்**, கிருபாசனப் பெட்டியின் மீது மோசே தெளித்த இரத்தத்தை அதன்மீதிருந்த இரண்டு கேருபீன்கள் குனிந்து பார்த்துக்கொண்டிருந்ததை இது மிகச் சரியாக நினைவூட்டுகிறது. ஆம், இதுதான் தேவனிடத்திற்குச் செல்லும் வழி.”

இரத்தம் சிந்துவதன் பலியின் மூலமாகவே **தேவனிடத்திற்குத்** திரும்பும் வழி இருக்கிறது



வாசிக்க: **ஆதியாகமம் 3:22-24**

ஜீவ விருட்சத்தின் மூலமாக மனிதன் இரட்சிக்கப்பட முடியாது.

ஆனால் இரத்தம் சிந்துதலாகிய பலியின் மூலமாக மனிதன் இரட்சிக்கப்பட்டு தேவனிடத்திற்கு வர முடியும்.

இவரே மனுக்குலத்திற்கு தேவன் ஏற்பாடு செய்த வாக்குறுதி, வழிவகை, நம்பிக்கை

தேவ ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து

“குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக்காலங்களில் வெளிப்பட்டார்”.
(எபேசியர் 1:4)

“...இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி”.
(யோவான் 1:29)

அடிக்கப்பட்ட **ஆட்டுக்குட்டியின் பலியானது** சிலுவையை முன்னோக்கிச் சுட்டிக்காட்டுகிறது. சிலுவையில் இயேசு கிறிஸ்து **தேவனுடைய கோபாக்கினையிலிருந்து நம்மை இரட்சிப்பதற்கான இறுதியான பலியாக இருக்கிறார்.**



“இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி”

(யோவான் 1:29)

சிந்தித்தலும் செயல்படுத்துதலும்

தேவனுடைய பண்புகள்

தேவன் எப்படிப்பட்டவர்?

தேவனுடைய இருதயம் எப்படிப்பட்டது?



1. சிந்தித்தல்

பாவத்துடன் சமரசம் செய்யாமல் தமது தெய்வீக நீதி செய்வதிலிருந்து தேவன் ஆதாமையும் ஏவாளையும் எவ்வாறு காப்பாற்றினார் என்பதைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள்.
அவர் மீட்பின் வழியாக இன்னமும் தமது தெய்வீக அன்பை வெளிப்படுத்திக்கொண்டேயிருக்கிறார்.

தேவன் எத்தகைய இருதயத்துடன் உங்களிடம் நடந்துகொண்டார் என்பதிலிருந்து நீங்கள் அறிந்துகொண்டதைப் பற்றி எழுதுங்கள்.

பிறகு, அவர் உங்களுக்கு என்ன செய்தார் என்பதற்காக அவருக்கு நன்றி சொல்லுங்கள்.

2. சிந்தித்தல்

இயேசு கிறிஸ்து – தேவனுடைய வாக்குறுதியின்படி வந்து நமது இரட்சிப்பின் நிறைவேறுதலாயிருக்கிறார்

இந்த உலகில் உள்ள ஒவ்வொருவரையும் இரட்சிக்கவேண்டுமெனில் அது **தேவனால் மட்டுமே** முடியும்.

எனவே, **இரட்சகர் தேவனாக இருக்க வேண்டும்.** அவர் மனிதனாக மாற வேண்டும், இதன் மூலமாக அவர் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரு பூரணமான மத்தியஸ்தராக இருக்க முடியும். தேவனுடைய எல்லையற்ற பரிசுத்தத்தைப் புரிந்துகொண்டு, மனிதனை தம்மோடு ஒப்புரவாக்குவதற்குத் தேவையான அவருடைய அனைத்து எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்கும், மனிதனுடைய ஆழ்ந்த தேவைகளைத் திருப்தி செய்வதற்கும் ஒரு மத்தியஸ்தர் வரவேண்டியிருந்தது.

தேவன் தம்முடைய குமாரனை அனுப்புவதாக அளித்த வாக்குறுதியே நாம் இரட்சிக்கப்படுவதற்கான ஒரே வழியாக இருக்கிறது.

செயல்படுத்துதல்

நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கும், தேவனுடைய குடும்பத்தின் ஓர் அங்கத்தினராக இணைவதற்கும், கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு என்ன செய்திருக்கிறார் என நீங்கள் எவ்வாறு நம்புகிறீர்கள்??

(யோவான் 1:29; யோவான் 3:15-17, 2 கொரிந்தியர் 5:21, அப்போஸ்தலர் 2:37, ரோமர் 5:14,15, எபிரேயர் 2:14-15, 1 தீமோத்தேயு 1:15, 1 யோவான் 3:5-8)

கிறிஸ்து நம்மை **தேவனோடு** ஒப்புரவாக்குவதற்காக என்னென்ன காரியங்களைச் செய்தார், இப்பொழுது என்னென்ன காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார் என்பதைப் பட்டியலிடுங்கள்:

(1 கொரிந்தியர் 1:30, 1 கொரிந்தியர் 15:20, 1 தீமோத்தேயு 2:5-6, எபிரேயர் 6:20, 1 கொரிந்தியர் 1:18, ரோமர் 3:19, 1 யோவான் 2:2, 1 பேதுரு 1:18-19, 1 கொரிந்தியர் 6:20, 2 கொரிந்தியர் 5.18-21, ரோமர் 5.10,11, எபேசியர் 2.16, கொலோசெயர் 1.20–22, மத்தேயு 19.28, தீத்து 3.5, 1 கொரிந்தியர் 1.30, 1 தெசலோனிக்கேயர். 4.3,4, 2 தெசலோனிக்கேயர் 2.13, 1 பேதுரு 1.2)

3. சிந்தித்தல்



டாக்டர் வெர்னோன் மெக்கியின் கூறுவதாவது:

> “நீங்கள் நானும் தேவனுக்கு முன்பாக பாவிகள் என்று ஒத்துக்கொள்ளும்போது இரட்சிப்பு நமக்கு அருளப்படுகிறது.”

நீங்கள் தேவனுடைய ஈவாகிய **இரட்சிப்பை** பெற்றுக்கொண்டீர்களா?
அப்படி இல்லையெனில் இதற்கான வழிமுறைகளைக் கீழே தந்திருக்கிறோம்.

“... மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும். தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்” (யோவான் 3:14ஆ-17).

“கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்” (ரோமர் 10:9,10).

4. பயின்றதைப் பகிர்ந்துகொள்ளுதல்:



ஆதாமும் ஏவாளும் உடுத்தியிருந்த அத்தி இலைகளைக் குறித்து, டாக்டர் வொர்னான் மெக்கி கூறும் சத்தியங்கள்.

> “அத்தி இலைகளிலிருந்தும், அதற்கு மாற்றாக தேவன் அவர்களுக்கு உடுத்திய தோல் ஆடைகளிலிருந்தும் நாம் நான்கு சிறந்த உண்மைகளைக் கற்றுக்கொள்ள முடியும்.”

- **மனிதன் தேவனை அணுகுவதற்கு அவர் ஏற்கத்தக்க ஓர் ஆடை அவனுக்கு இருக்க வேண்டும். உங்கள் நற்செயல்களின் அடிப்படையில் நீங்கள் தேவனிடம் வர முடியாது. கர்த்தாவே நான் ஒரு பாவி, பாவியாகவே உம்மிடம் வருகிறேன் என்று வரவேண்டும்.**
- **அத்தி இலைகள் மனித முயற்சியால், அவனாலேயே உண்டுபண்ணப்பட்டவை ஆகும். இவை தேவனால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவை அல்ல.**
- **அவர்களை மூடுவதற்கு தேவனே ஓர் ஆடையை வழங்க வேண்டும்.**
- **கர்த்தராகிய இயேசுவின் மரணத்தின் மூலமாக மட்டுமே மனிதனை மூடுவதற்கான ஆடை பெறப்படுகிறது.**

ஆதியாகமம் 3:14-24 வசனங்களில் கற்றுக்கொண்ட சத்தியங்களிலிருந்து இரட்சிக்கப்படாத மக்களுக்கு எவ்வாறு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்வீர்கள்?



உங்கள் வாழ்க்கையில் அனுபவமாக்குதல்

தேவனுடைய அறிவாற்றலை எனது வாழ்க்கையில் ஒருங்கிணைத்துக்கொள்ளுதல்

டாக்டர் வெர்னோன் மெக்கியின் மேற்கோள்கள்:



“தேவன் மனிதனைத் தேடி வருவதே இரட்சிப்பு. மனிதன் தேவனிடமிருந்து ஓடிவிட்டான். தேவனோ அவனைத் தேடிவந்து, “நீ எங்கே இருக்கிறாய்?” என்று அழைத்தார். தேவன் மனிதனைத் தேடுவது பற்றி வேதாகமம் முழுவதிலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. “தேவனைத் தேடுகிறவன் ஒருவனும் இல்லை” (ரோமர் 3:11) என்று பவுல் எழுதினார். “நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை; நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்” (யோவான் 15:16) என்று கர்த்தராகிய இயேசு கூறினார். மேலும் யோவானுடன் சேர்ந்து நாமும், “அவர் முந்தி நம்மிடத்தில்அன்புகூர்ந்ததால் நாமும் அவரை அன்புகூருகிறோம” (1 யோவான் 4:19) என்று கூறுகிறோம். தேவன் மனிதனைத் தேடுகிறார், அவர் மனிதனுக்கு இரட்சிப்பை வழங்குகிறார்.”

THRU the BIBLE

எங்களுடைய வேதபாடங்களை
நீங்கள் பெற்றுக்கொள்ள

www.ttb.org

வலைத்தளத்திற்கு செல்லவும்

TTB செயலியை பதிவிறக்கம் செய்வதற்கு QR CODEஐ
ஸ்கேன் (SCAN) செய்யவும்.